விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்நான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 19 வெள்ளிக்கிழமை (04.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259




# நலன்புரி முகாமிலுள்ள மக்களின் நிலைமைகள் கவலையளிக்கின்றது

## ஐ.நா. செயலர் ஜெனீவாவில் தெரிவிப்பு




(ஜெனீவா)

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதி மக்களின் நிலைமைகள் தொடர்பில் கவலை கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

காலநிலை தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா சென்றுள்ள பான் கீ மூன் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

செல்வச்சந்நிதி முருகன் தேரேறிவரும் காட்சி.



## ஏ-9 பாதையூடாக பயணம் செய்யவிருந்த 284 பாரவூர்திகளின் அனுமதி இரத்து

(கொழும்பு)

தென்பகுதியில் இருந்து ஏ-9 பாதை வழியாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்து வருவதற்கு 854 பார ஊர்திகளுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்துள்ளார்.

இந்த பார ஊர்திகளின் உரிமையாளர்கள் பொருட்களை விநியோகிப்பதற்கான அனுமதியைப் பெற்றதன் பின்னர் ஒரு தடவை கூட யாழ்ப்பாணத்திற்கு தமது வாகனங்களில் பொருட்களை அனுப்பிவைக்க வில்லை என்பதனாலேயே அவற்றின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப் பட்டன என அத்தியாவசிய (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-வவுனியா சேவையில் இன்று 20 பஸ்கள் ஈடுபடும்

### நேற்று மட்டும் 865 பயணிகள் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடான வவுனியா வரையான போக்குவரத்துச் சேவையில் இன்று 20 பஸ்கள் ஈடுபடுத்தப் படவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. கணேஷ பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் வி. கணேஷபிள்ளை (14ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகளுக்கு உதவ தமிழ்ச் சமூகத்துக்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 10 ஆயிரம் பேரின் புனர்வாழ்வுக்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகம் உதவிகளைச் செய்ய வேண்டும் என அரசு கேட்டுள்ளது.

இந்த இளைஞர்களுக்கு புனர்வாழ்வு வழங்க முடியும் என்பதில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தயா ரட்னாயக்க நம்பிக்கை வைத்துள்ளார்.

தமது ஆணையகம் உள்ளூர் வர்த்தகர்களுடனும் அனைத்துலக அமைப்பைச் சேர்ந்தவர்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு உதவ (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர பிரதி மேயர் பதவி ஒரு வருடத்துக்கு ஈபிடிபிக்கு!

(கொழும்பு)

யாழ். மாநகர சபை தேர்தலில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றதையடுத்து, உப மாநகர சபை முதல்வராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட முறுகல் நிலைக்கு நேற்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பட்டியலில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்பன தமது வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது.

இந்த நிலையில் யாழ். மாநகர சபையினை ஆளும் கட்சி கைப்பற்றியதும் மாநகர முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் ஆகியோரை ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சேர்ந்த இருவரை (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சோதனை அதிகரிப்பு

(கொழும்பு)

வவுனியா நகரிலும், நகரைச் சூழந்த பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நகர வீதிகளில் செல்லும் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பன வீதித்தடை முகாம்களில் மறித்து சோதனையிடப்படுகின்றன. அத்துடன் சைக்கிள்களில் செல்வோரும் சோதனையிடப்படுகின்றனர். (ச-5)

## சனல்-4 வீடியோக்காட்சியினால் சர்வதேச அளவில் கடும் விமர்சனம்

### கவலையடைந்துள்ளது அரசு

(கொழும்பு)

நிராயுதபாணிகள் சிலரை இலங்கைப் படையினர் சுட்டுக்கொல்வது போன்ற வீடியோக்காட்சி பல்வேறு சர்வதேச தரப்புக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் படையினர் இவ்வாறான ஒரு செயலில் ஈடு படவில்லை என்று இலங்கை அரசு மீண்டும் கூறியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச அளவில் சில பகுதிகளில் இருந்து வெளியாகும் விமர்சனங்களால் தாங்கள் கவலை அடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம நேற்றுவிடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

NORTH LANKA IIT
0217390110
0602214305

4ம், 5ம் திகதி NORTH LANKA IIT யாழ் நிறுவனத்திலும்
6ம் திகதி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும்
B.Sc. in Multimedia Computer Science கற்கைநெறிகளுக்கு
யாழ் வந்துள்ள Nottingham College of London Director இனால்
நேரடி அனுமதிகள் வழங்கப்படுகின்றன!
Spot Admission
(C-3247)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



இலங்கை பொலிஸ் சேவையின் 143-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொலிஸார் அணிவகுத்து நிற்பதையும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொஷான் பெர்னாண்டோ பொலிஸ் கொடியை ஏற்றுவதையும் அருகில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் காணப்படுவதையும் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

# வட மாகாண சபை தலைமை அலுவலகத்துக்கு புதிய முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம்

வடக்கு மாகாண சபையின் தலைமைக் காரியாலயங்களிற்கு 15.09.2009 இல் நடைமுறைக்கு வரும் வகையில் 20 புதிய முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் பற்றிய விபரங்கள் வட மாகாணப் பிரதிப்பிரதம செயலாளர், யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அறியத்தந்துள்ளார். இவர்கள் திருகோணமலைக்குச் சென்று தமது கடமையைப் பொறுப்பேற்பதற்கு ஏதுவாக பாதுகாப்பு அனுமதியைப் பெறுவது தொடர்பில் உரிய ஆவணங்களுடன் யாழ். மாவட்டச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டவர்க்ளின் விபரம் வருமாறு;

நிறோயி ராஜசிங்கம் (திருநெல்வேலி கிழக்கு), கவாஸ்கர் கணபதிப்பிள்ளை (மாதகல்), சிவரதி சிவராசா (தெல்லிப்பழை), தரணிதன் லோகநாதன் (திருநெல்வேலி), வடிவேல் திருக்குமாரன் (அளவெட்டி தெற்கு), வேலாயுதம் சுதர்சன் (வடலியடைப்பு), மனோகரன் பிரதீப் (நீர்வேலி), சின்னத்துரை தயாரதி (சரசாலை தெற்கு), அமிர்தலிங்கம் கபிலன் (அச்சுவேலி வடக்கு), நாகேஸ்வரா சுஜானி (சண்டிலிப்பாய் மேற்கு), செல்வராசா வனிதா (கச்சேரி நல்லூர்), அஜந்தா இராஜதுரை (கரவெட்டி கிழக்கு), தர்மகுலசிங்கம் கீர்த்திகா (சுன்னாகம்), சடாச்சரம் கிருஷாந்தினி (திருநெல்வேலி), சுப்ரமணியம் தர்ஷிகா (சாவகச்சேரி), பத்மநாதன் சுகாஷினி (பலாலி வீதி), வைத்திலிங்கம் ஜினோதினி (சுதுமலை மேற்கு), ரூபவாஹினி சிவசுப்ரமணியம் (தும்பளை), மகேந்திரன் கலைமகள் (கொக்குவில் மேற்கு), தவநடராஜா ரஜனி (கோப்பாய் தெற்கு). (ச-3)

## 67 கிளைகளை அமைக்க வணிக வங்கிகளுக்கு அனுமதி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 67 கிளைகளை அமைக்க வணிக வங்கிகளுக்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளதாக ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான இராஜேந்திரா தியாகராஜா தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்துக்கு கணனிகளை கையளிக்கும் நிகழ்வின் பின் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதைவிட ஹற்றன் நஷனல் வங்கியின் செயற்பாடுகள் குறித்தும் அவர் விளக்கமளித்தார். (ச-5)


# வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.

## வேலை பற்றி

- ☆ ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
- ☆ இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- ☆ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- ☆ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

## அடிப்படைத் தகைமை

- ☆ G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
- ☆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) 10.09.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. C-3144
C/O, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-3144)


# சந்நிதி சேவைக்கு உதவிய தென்னிலங்கைச் சாரதி

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சந்நிதி முருகன் ஆலயத்துக்கான போக்குவரத்துச் சேவைக்கு தென்னிலங்கையிலிருந்து வந்த போக்குவரத்துச் சபையின் சாரதி ஒருவர் உதவிபுரிந்துள்ளார்.

சந்நிதி ஆலயத்துக்கான விசேட போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கு சாரதி பற்றாக்குறை நிலவியதால் ஒரு சில பஸ்களை மட்டுமே சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இச் சேவைக்கு உதவ தென்னிலங்கைச் சாரதி இணக்கம் தெரிவித்ததால் மேலும் ஒரு பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சாரதி வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கான உதிரிப்பாகங்களை ஏ-9 பாதை ஊடாகக் கொண்டு வந்தவர் எனத் தெரி விக்கப்பட்டது. (ச-5)

# மாணவர்களுக்கான புதிய பதிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் முன்பள்ளி கற்கை நெறிக்கான பதிவுகள் மற்றும் மீள் பதிவுகள் நாளை காலை 11 மணி தொடக்கம் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது.

இக் கற்கை நெறிக்கான பதிவிற்காக புதிய மாணவர்களையும் சென்ற ஆண்டு கற்கை நெறியினை பயின்று கொண்டிருக்கும் மாணவர்களையும் தவறாது பதிவினை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். பதிவுகள் குறிப்பிட்ட திகதியில் மட்டுமே நடைபெறும் எனவும் அவர் அறிவித் துள்ளார். (ச)


# Jaffna Technical Institute(JTI)

No. 45, Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING (DCA)
ACCOUNT EXPRESS + TALLY ACCOUNTING
QUICK BOOKS + ASSET MANAGER + PEACHTREE

| 06.09.2009 | 12.09.2009 | 13.09.2009 |
|---|---|---|

காலை : 10.00 மணி
கட்டணம் : 3000 /=

பதிவுக் கட்டணம் இலவசம்

(C-3216)



# பணி தொடர எமது வாழ்த்துக்கள்



எமது செயற்பாட்டுக்குழுவின் காப்பாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான,

**திரு.சில்வஸ்ரர் அலன்ரின் (உதயன் தோழர்)**

அவர்கள் 03.09.2009 அகில இலங்கை சமாதான நீதவானாக (J.P) பதவியேற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு எமது அமைச்சரின் வழிகாட்டலில் மக்கள் பணிகள் பல செய்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

நிர்வாகம்,
வன்னி மக்கள் துயர் துடைப்புச் செற்பாட்டுக்குழு.

(C-3246)

## இலவச யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப் பெற்றுவரும் இலவச யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவு நாளை சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் அனைவரும் பங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பதிவுகளை நாவலர் மணிமண்டபத்தில் மேற் கொள்ளலாம். (ஓ-18)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலை காரணமாக நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின்சாரம் தடைப்படும் என சுன்னாகம் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மின்சாரம் தடைப்படும் இடங்களாவன, பிறவுண்வீதி, இராமநாதன்வீதி, இந்து மகளிர் கல்லூரி பிரதேசம், கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதி, மனோகரா தியேட்டர் பிரதேசம், கே.கே.எஸ்.வீதி, ஆத்திசூடி வீதி ஆகியனவாகும்.

அத்துடன் சனி, ஞாயிறு இரு தினங்களிலும் வேலணை ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை மின்சாரம் தடைப்படு மெனவும் அறிவித்துள்ளார். ஓ

## பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோகேந்திரா நிலையத்தினால் மகோற்சவ காலங்களில் நடத்தப் பெற்ற இந்துசமய பொது அறிவு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 3மணிக்கு சிவலிங்க யோகேந்திரா செயலாளர் சிவ. உமாதரன் தலைமையில் மாசீன் கூடல் கலப்பராயர் முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். ஓ

## மதிலுடன் மோதி இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் படுகாய மடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் திருநெல்வேலியில் பாற்பண்ணை வீதியில் இடம்பெற்றுள்ளது.

அதேஇடத்தைச்சேர்ந்த ச. வாரணராஜ் வயது (16) என்பவர் தனது சொந்த அலுவல்களின் நிமித்தம் வீட்டில் இருந்து குறித்த வீதியின் ஊடாக புறப்பட்டுச் சென்றவேலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

தலையில் படுகாயங்களுக்குள்ளான குறித்த நபர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-30)

## ஐக்கிய ராச்சியத்தின் கணனிப்பட்ட கற்கைநெறியின் ஆரம்ப வைபவம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின்(IIT) ஐக்கிய ராச்சியத்தின் கணனிப் பட்டக்கற்கை நெறிகளின் ஆரம்ப வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 182 பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி யின் யாழ் கிளையில் நடைபெறவுள்ளது.

ஐ.ஐ.ரி யின் கொழும்புக் கிளைப் பட்டக் கற்கை நெறிப் பிரிவின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா கணனி விரிவுரையாளர் துசிதா கல்பகே ஆகியோர் ஆரம்ப நிகழ்வின் போது யாழ்ப்பாண மாணவர்கள் வெஸ்மினிஸ்ரர் பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டங்களை உள்வாரியாக கற்றுப் பட்டங்கள் பெறும் வழிமுறைகள் பற்றிய பூரண விளக்கங்களை வழங்கவுள்ளார்கள்.

உயர்தர வகுப்பு மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மேற்படி நிகழ்வுக்கு வருகை தந்து கணனிப்பட்டக் கற்கை நெறிகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென ஐ.ஐ.ரி யாழ் கிளை கல்விச் செயற்பாட்டுத்திட்ட இணைப்பாளர் பேராசிரியர். இரா சிவசந்திரன் தெரிவிக்கின்றார். ஓ

## நடமாடும் சேவையில் தீர்வு கோரவுள்ளோருக்கு

தீவகக் கல்வி வலயத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெற வுள்ள நடமாடும் சேவையில் தீர்வு கோரி விண்ணப்பங்களை சமர்பிக்க விரும்பும் ஆசிரியர், அதிபர்கள், அலுவலர்கள், சிற்றூழியர்கள் தமது விண்ணப்பங்களை இன்றும் நாளையும் வலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தீவகவலயகல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். ஓ

யாழ். செய்திகள்

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்ட முதன்மை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை பயிற்சி நெறி அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை பயிற்சி நெறி எதிர்வரும் 7 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி பி.ஜி.மகிபாலா கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஈ.ஞானசோதி, கௌரவ விருந்தினராக யாழ். நெக்கோட் பிரதி திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் அறிவித்துள்ளார். (ஓ-6)

## நாடகமும் அரங்கியல் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்ட கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாட சாலைகளில் நாடகமும் அரங்கியலும் பாட நெறியைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தரவட்டமானது மாதாந்தக் கருத்தமர்வுகளை நடத்திவருகின்றது.

இத்தரவட்டத்தில் செப்ரெம்பர் மாதத்திற்கான கருத்தமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். கல்வித் திணைக்கள வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் க.பொ.த உயர்தரத்திற்கான *யூலியர் சீசர்* நாடக எழுத்துரு பற்றி நோக்கப்படவுள்ளது.

இதில் அருட்திரு ஜே. வி. ஜெயசீலன் அடிகள் வளவாளராக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்விற்கு யாழ். கல்வி வலயத்தில் நாடகமும் அரங்கிலைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளதோடு ஆர்வமுள்ள ஏனைய வலய ஆசிரியர்களும் கலந்து கொள்ளலாம் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். ஓ

## இலவச கண்பரிசோதனை முகாம்களும் விசேட விலையில் கண்ணாடிகள் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)


எரிக்ராஜபக்ஷ நிறுவனம் கடவுளின் குழந்தைகள் (GOC)அமைப்பின் அனுசரணையுடன் இலவச கண்பரிசோதனை முகாம்களை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 13 திகதி வரை மானிப்பாய், நல்லூர்,மந்திகை ஆகிய இடங்களில் நடத்தவுள்ளது.

இம்முகாம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலடிச்சந்தி மானிப்பாயில் அமைந்துள்ள பிரிட்டிஷ் பிஸ்னஸ் பாடசாலையிலும் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கோவில் வீதியில் அமை துள்ள மேற்படி பாடசாலையிலும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம் பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மந்திகை சிறிபத்மநாதன் இல்லத்தில் அமைந்துள்ள பிரிட்டிஷ் பிஸ்னஸ் பாடசாலையில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரையும் நடத்தப்படவுள்ளது.

இம் முகாமில் அதி நவீன இலத்திரனியல் உபகரணத்தைக்கொண்டு இலவச கண் பரிசோதனை நடத்தப்படவுள்ளதுடன் இம் முகாம்களில் சோதனைக்குள்ளாகும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவுடனும் ஆசிரியர்களுக்கு 25 வீத விலைக்கழிவுடனும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு 20 வீத விலைக்கழிவுகளுடனும் ஏனையோருக்கு 15 வீத விலைக்கழிவுகளுடனும் மூக்குக்கண்ணாடிகளை எரிக் ராஜக்ஷ நிறுவனத்தினரால் வ்ழங்கப்படவுள்ளதாக கடவுளின் குழந்தைகள் அமைப்பின் தலைவர் அறியத்தந்துள்ளார். (ஓ-6)





சாவகச்சேரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சைவநெறிப் பாட தோத்திரப் பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில், முதலாவது இறுவட்டை வெளியீட்டு அனுசரணையாளரும் ஆலயத் திருப்பணியாளருமான வை.சிவராசா தம்பதிகளிடம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி மா.வேதநாதன் வழங்குவதையும், அருகில் சைவப் புலவர் கு.சுமுகலிங்கம், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் ஆகியோர் நிற்பதையும், தேவாரம் பாடிய இசைமாமணி பொன். வாமதேவனை கௌரவித்து இறுவட்டு வழங்குவதையும், அருகில் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா நிற்பதையும் படங்களில் காணலாம்.

## வடமராட்சி கல்வி வலய அதிபர்கள் கூட்டமும் நடமாடும் சேவையும்

மாகாணக் கல்வி திணைக்கள அதிகாரிகளுடன் வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நடமாடும் சேவை பிற்பகல் 1.30 மணியில் இருந்து பிற்பகல் 5 மணிவரையும் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் இந் நடமாடும் சேவையில் கலந்து தத்தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதிபர்களுக்கான கூட்டம் 9 ஆம் திகதியும் நடமாடும் சேவை 10,11ஆம் திகதிகளில் நடைபெறுவதாக முன்னர் அறிவித்திருந்து தற்போது மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓ

# ஹெலிகொப்டர் விபத்தில் ஆந்திர முதல்வர் ராஜசேகரரெட்டி மரணம்

ஆந்திர முதல்அமைச்சர் ராஜசேகர ரெட்டி பயணம் செய்த ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் காலை திடீரென மாயமாக மறைந்தது. இரட்டை எஞ்சின்களைக் கொண்ட பெல் 430 ரகத்தைச் சேர்ந்த அந்த ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் காலை 9.45 மணிக்கு ரிடரில் இருந்து மறைந்தது.

10.15 மணிக்கு ஹெலிகாப்டரின் ரேடியோ தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. அந்த ஹெலிகொப்டரில் முதலமைச்சர் ராஜசேகர ரெட்டியுடன் ஆந்திர மாநில முதன்மைச் செயலாளர் எஸ். சுப்பிரமணியம் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி வெஸ்லி ஹெலிகொப்டர் விமானிகள் கப்டன் எஸ். கே. பாட்டியா கப்டன் எம்.எஸ் ரெட்டி ஆகியோர் இருந்தனர்.

ஹெலிகொப்டருக்கும் சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கும் கடைசியாக இருந்த றேடியோ தொடர்பு மூலம் ஹெலிகொப்டர் கர்னூல் மாவட்டத்தில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியான நல்லமலா காட்டுக்குள் தரையிறங்கி இருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது.

பலத்த மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக ராஜசேகர ரெட்டி பயணம் செய்த ஹெலிகொப்டர் நல்லமாலா அடர்ந்த காட்டுக்குள் விழுந்து நொருங்கி இருக்கலாம் என்று அச்சம் எழுந்தது.

ராஜசேகர ரெட்டியைக் கண்டுபிடிக்க இந்திய விமானப்படையின் சுகோய் விமாணங்கள் இஸ்ரோ விமானம் மற்றும் ஆளில்லாத விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. பலத்த மழைபெய்ததால் நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு ஹெலிகொப்டர் மூலம் தேடும் பணி நிறுத்தப்பட்டது. பின்னர் நேற்றுக்காலை 6மணிக்கு மீண்டும் ஹெலிகொப்டர்கள் மூலம் தேடுதல் வேட்டை தொடங்கியது.


. ஐயாயிரம் மத்திய ரிசர்வ் பொலிஸார் , ஆந்திர மாநிலத்தின் ஆறு மாவட்ட பொலிஸார், வனலாகாவினர், மற்றும் மலை வாழ் இனமக்கள் என சுமார் 25000 பேர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

ஸ்ரீசைலம் ஆற்றில் விழுந்து இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் 300 பேர் படகுகளில் தேடுதல் பணியை மேற்கொண்டனர். இதற்கிடையே நேற்றுக்காலை ராஜசேகர ரெட்டியை கண்டுபிடிக்கும் பொறுப்பை இராணுவம் ஏற்றது. இராணுவத்தின் அதிரடிப்படை வீரர்கள் கர்னூல் மாவட்ட அடர்ந்த வனப்பகுதிக்குச் சென்றனர். ஹெலிகொப்டரிடம் இருந்து கடைசியாக வந்த சிக்னல் அடிப்படையில் ஹெலிகொப்டர் கடைசியாக கர்னூல் மாவட்டம் ஆத்மகூருக்கும் பண்டி ஆத்மகூருக்கும் இடையே பறந்ததாக கணிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தை ஒட்டி 5கிலோமீற்றர் சுற்றளவில் தான் ஹெலிகொப்டர் விழுந்திருக்க வேண்டும் என்று அதிகாரிகள் நேற்று காலை முடிவுக்கு வந்தனர்.

அதன்படி அந்தப்பகுதியில் சுகோய் ஹெலிகொப்டர்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத் தப்பட்டனர். இராணுவக் குழுக்களும் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து தேடினார்கள். நேற்று க்காலை இராணுவத்தின் முயற்சிக்கு வெற்றி கிடைத்தது.

இராணுவத்தின் பாரத் பிரிவு வீரர்கள் ராஜசேகர ரெட்டி ஹெலிகொப்டர் நல்லமலாக்காட்டுக்குள் ருத்ரகொண்டா என்ற இடத்தில் சோமசிலா மலைமீது கிடப்பதை கண்டுபிடித்தனர். கர்னூல் நகரின் கிழக்கு திசையில் சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் மலைமீது ஹெலிகொப்டர் நெருங்கிக்கிடந்தது . ஹெலிகொப்டர் கண்டு பிடிக்கப்பட்ட இடத்திற்கு இராணுவ அதிரடிப் படை விரைந்தது. ஹெலிகொப்டர் மலைமீது மோதி துண்டாக உடைந்ததை இராணுவ வீரர்கள்பறந்தபடி பார்த்தனர்.

ஹெலிகொப்டரின் உடைந்து நொருங்கிய பாகங்களில் இருந்து தீப்புகைவந்தது. எனவே மலைமீது மோதியதும் ஹெலிகொப்டர் தீப்பிடித்து எரிந்திருப்பது தெரியவந்தது.



ஹெலிகொப்டர் மோதி தீப்பிடித்த இடத்திற்குவிமான படை யின் இ ர ண் டு ஹெலிகொப்டர்கள் விரைந்தன. ஹெலிகொப்டர் சிக்கும் இடம் மிகமிக அடர்ந்த க்காட்டுப்ப குதிஆகும். எனவே அங்கு விமானப் படை ஹெலிகொப்டர்களை தரையிறக்க இயலவில்லை. விமானப்படை வீரர்களுக்கு இதில சவாலான நிலை ஏற்பட்டது.

இதையடுத்து விமானப்படையின் அதி நவீன அதிரடிப்படை கமாண்டோ வீரர்கள் களத்தில் இறங்கினார்கள். அந்தப் படைவீரர்கள் ஹெலிகொப்டர்உள்ளபகுதிக்கு விரைந்தனர். மிக மிக தாள்வாகப் பறக்கும் ஹெலிகாப்டர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஹெலிகொப்டரில் இருந்து பரசூட் மூலம் அதிரடிபடை வீரர்கள் குதிக்கவைக் கப்பட்டனர் . நொருங்கிக் கிடந்த ஹெலிகொப்டர் அருகே பரசூட் வீரர்கள் இறங்கினார்கள். அவர்கள் ஹெலிகொப்டரின் உடைந்த பாகங்களை அகற்றினார்கள் . அப்போது ஹெலிகாப்டர் சிதறிக்கிடந்த இடத்தில் 5 பேரின் உடல்கள் கரிகிய நிலையில் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

ஆந்திர முதலமைச்சர் ராஜசேகர ரெட்டியும் அவருடன் பயணம் செய்த நாலு பேரும் இந்த கோரவிபத்தில் இறந்து விட்டனர்.

நேற்றுக்காலை 9.50 மணிக்கு ராஜசேகர ரெட்டி உடல் கருகிய நிலையில் மீட்கப்பட்டார்.

ஐந்து பேர் உடல்களும் கர்னூலில் இருந்து ஐதராபாத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதனால் ஆந்திராவில் கடும்பதற்றம் நிலவுகிறது. (ஓ-6)

## வறுமையின் கொடுமையால் 6 பேர் பரிதாப மரணம்

(அலகாபாத்)

உத்தரப் பிரதேசத்தில் வறுமை காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர். உத்தரப் பிரதேசம் அலகாபாத் அருகே உள்ள சாராய் இனயாத் என்ற பகுதியைச் சேர்ந்தவர் கமலேஷ் சங்கர் யாதவ். இவரது மனைவி சரிதா . இவர்களுக்கு நான்கு குழந்தைகள். கடந்த இரண்டு ஆண்டுகளாக கமலேஷுக்கு சரியான வேலை அமையவில்லை. வறுமை காரணமாக இவர்களின் குழந்தைகள் பள்ளிக்கு செல்வதையே நிறுத்தி விட்டனர்.

இதையடுத்து குடும்பத்துடன் தற்கொலை செய்வதற்கு கமலேஷ் முடிபு செய்து 6பேரும் ரயில் முன் பாய்ந்து குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டனர். இந்த சம்பவம் அல காபாத் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (6)

## அனல் மின் நிலைய மாசு பஞ்சாபில் பிறக்கும் குழந்தைகளுக்கு பாதிப்பு

(சண்டிகார்

பஞ்சாப் மாநிலம் பதிண்டா மற்றும் பரித் கோட் ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்கள் நிலையங்கள் உள்ளன.

இங்கு எரிக்கப்படும் நிலக்கரியினால் ஏற்படும் மாசு காரணமாக அங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மேலும் புற்றுநோய் போன்ற நோய்களும் உருவாகின்றன.

இந்தத் தகவலை தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி தனது ஆய்வுமூலம் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல் இங்கிலாந்து நாட்டில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. புகை மூலம் வெளியாகும் நிலக்கரி துகள்களில் உள்ள யுரேனியம் இந்தப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அதில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)


## சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழாக்காட்சிகள்
















படங்கள்:- கோபி.சுதாகர்

## வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தில்

# யாழ்.மாவட்ட விவசாய அபிவிருத்திக்கு 92 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் 180 நாட்கள் வேலைத் திட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு யாழ்.விவசாயத் திணைக்களத்திற்கு 92.723 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளதாக யாழ். விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார்.



இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் யாழ்.விவ்சாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சி.சிவகுமார் வலம்புரிக்கு அளித்த பேட்டி இங்கு தொகுத்து வழங்கப்படுகிறது

"வடக்கின் வசந்தம்" 180 நட்கள் வேலைத் திட்டத்தில் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு 92.723 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையாக வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் 5.82 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியில் வீட்டுத்தோட்ட அபிவிருத்திப் போட்டியும், கிழங்குப்பயிர்ச்செய்கை மேம்படுத்தல், சேதன முறையிலான மரக்கறி உற்பத்தி, பழங்களுக்கான சேகரிப்பு மற்றும் விற்பனை நிலையம் அமைத்தல், காளான் செய்கையை மேம்படுத்தல், கிராமிய அமைப்புக்களுக்கு சிறிய அளவிலான துறையை வலுப்படுத்தல் மற்றும் விவசாய சமூகத்தில் ஆற்றலினை மேம்படுத்தல் ஆகிய ஏழு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### நாங்கள் பயிர் செய்வோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

நாங்கள் பயிர்செய்வோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் திட்டத்தில் 6 இலட்சத்து 70 ஆயிரம் (0.67 மில்லியன்) ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மிளகாய் விதை உற்பத்தி , அவரைப் பயிர்களின் விதை உற்பத்தி, சோளப் பச்சைப் பொத்தி உற்பத்தியை விரிவுபடுத்தல் , நீர் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மூலம் விவசாய உற்பத்தியினை அதிகரித்தல் , சின்ன வெங்காயத்திற்கான களஞ்சிய வசதியினை அபிவிருத்தி செய்தல், விவசாய அடிப்படையிலான தொழில் நடவடிக்கைகளினை விருத்தி செய்தல் மற்றும் உள்ளூர் உணவுகளை பிரபல்யப்படுத்தல் ஆகிய 7 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 'ஒரு பயிர் ஒரு கிராமம்'

ஒரு பயிர் ஒரு கிராமம் திட்டத்தில் 18.89 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் தற்பொழுது 14 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு கிராமத்தை தெரிவுசெய்து அங்கு ஒரு பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தில் பின்வரும் பயிர்ச் செய்கைகள் பிரதேச செயலக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *மிளகாய்ப் பயிர் கிராம அபிவிருத்தி*

இப் பயிர்ச்செய்கைக்கு 0.16 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கோப்பாய், தெல் லிப்பளை மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *அவரைப் பயிர்ச்செய்கை விரிவாக்கல்*

இப் பயிர்ச்செய்கைக்கு 0.39 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கோப்பாய், தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *நிலக்கடலைக் கிராமம்*

இப்பயிர்ச்செய்கைக்கு 0.30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *எள்ளுச் செய்கையினை விரிவுபடுத்தல்*

இப்பயிர்ச்செய்கைக்கு 0.11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *ஒருங்கிணைந்த தாவர போசன முகாமைத்துவம்*

இத் திட்டத்திற்கு 0.26 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடுவில் , தென்மராட்சி , சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுகளில் மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *பழைய மாமரங்களைப் புதுப்பித்தல்*

இத் திட்டத்திற்கென 0.96 மில்லியன் ரூபாய் நிதிஒதுக்கீடு செய்து தென்மராட்சி , கோப்பாய் , சண்டிலிப்பாய் , சங்கானை மற்றும் உடுவில் பிரதேச செயலக பிரிவுகளில் வேலைத்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

## பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு ; யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் செவ்வி

- *வாழைச் செய்கையினை மீள் நடுகை செய்தல்*

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இத் திட்டத்திற்கு 0.58 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- *முந்திரிகைச் செய்கையினை விருத்தி செய்தல்*

இத் திட்டத்திற்கு 0.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சண்டிலிப்பாய், தெல்லிப்பளை மற்றும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *இனிப்புத்தோடைச் செய்கை*

இனிப்புத் தோடைச் செய்கைத் திட்டத்திற்கு 0.09 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கரவெட்டி, கோப்பாய், தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *மாதுளைச் செய்கையை மேம்படுத்தல்*

இத்திட்டத்திற்கு 0.04 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- *அலங்காரத் தாவரங்களின் உற்பத்தியினை அபிவிருத்தி செய்தல்*

இத்திட்டம் தென்மராட்சி, கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 0.07 மில்லியன் ரூபாய் நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சிய வசதியினை மேம்படுத்தல்*

இத்திட்டத்திற்காக 5.05 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் சண்டிலிப்பாயில் முந்திரிகை பழ உற்பத்தி, விற்பனையாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் விற்பனைக்கும் களஞ்சியப்படுத்தலுக்குமாக கட்டடம் ஒன்று அமைக்கப்படுகின்றது.

- *பண்ணை இயந்திர மயமாக்கல்*

இத் திட்டத்திற்கான 10.08 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 30 தூவல் நீர்ப்பாசனக் கருவிகள், 150 தெளிகருவிகள் மற்றும் 120 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொள் வனவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

- *பயிற்சிகளும் வெளிக்கள விஜயங்களும்*

இதற்காக,0.08 மில்லியன் ருபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பயிற்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### சேதனைப் பசளைகளின் உற்பத்தியினை மேம்படுத்தல்

சேதனைப் பசளைகளின் உற்பத்தியினை மேம்படுத்தல் திட்டத்திற்கு 1.06 மில்லியன் ருபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12 வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### தொழில் முயற்சி அபிவிருத்தி சேவைக்கான நிலையத்தின் உதவி

தொழில் முயற்சி அபிவிருத்தி சேவைக்கான நிலையத்தினால் (CEDS) 0.5 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

இதில் காளான் உற்பத்தியினை மேம்படுத்தல் வெற்றிலைச் செய்கையை மேம்படுத்தல் மற்றும் பாடசாலை தோட்ட அபிவிருத்தி ஆகிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் பாடசாலை தோட்ட அபிவிருத்தித் திட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களில் மொத்தமாக 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதில் தென்மராட்சி கல்வி வலயத்தில் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும், வடமராட்சி கல்வி வலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ,புலோலி புத்தல மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் வலிகாமம் கல்வி வலயத்தில் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மற்றும் வட்டு மத்திய கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளும்,

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும், தீவகக் கல்வி வலயத்தில் வேலணை மத்திய கல்லூரி ,வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டு மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### கமநெகும அபிவிருத்தித் திட்டம்

கமநெகும (கிராம எழுச்சி) அபிவிருத்தித் திட்டத்தில் 11 வேலைத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தேச நிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் 2009 ஆம் ஆண்டிற்காக யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து யாழ் அரச அதிபரினால் யாழ் விவசாயத்தி ணைக்களத்திற்கு 65.57 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பின்வரும் 11 வேலைத் திட்டங்கள் தற்பொழுது பிரதேச செயலக பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- *தூவல் நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல்*

இத் திட்டத்திற்கென 26.95 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 8 பிரதேச செயலகப் பிரிவுகளில் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- *சொட்டு நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல்*

இத் திட்டத்திற்கென 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 7 பிரதேச செயலக பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- *காளான் செய்கையின்ன மேம்படுத்துதல்*

இத்திட்டத்திற்காக 1.6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் வேலைத்திட்டம் மேற்கொள்ப்பட்டு வருகிறது:

- *குரக்கன் செய்கையினை விருத்தி செய்தல்*

யாழ்.மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் குரக்கன் செய்கையினை விருத்தி செய்வதற்காக 1.09 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- *பயறுச் செய்கையினை விரிவுபடுத்தல்*

இத் திட்டத்திற்கென 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2.49 மில்லியன் ரூபாய் செலவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

- *கௌப்பி செய்கையினை விரிவுபடுத்தல்*

இத் திட்டத்தின் ஊடாக 5.54 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

- *நிலக்கடலை பயிர்ச்செய்கை விரிவுபடுத்தல்*

யாழ். மாவட்டத்தில் 10 பிரதேச செயலக பிரிவுகளில் நிலக்கடலைச் செய்கையினை விரிவுபடுத்துவதற்கென 5.51 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- *உழுந்து செய்கையினை விரிவுபடுத்தல்*

இத்திட்டத்திற்கென 4.9 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 பிரதேச செயலக பகுதியில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- *மாதுளை மற்றும் கொய்யாச் செய்கையினை மேம்படுத்தல்*

இத் திட்டம் 8 பிரதேச செயலகப் பிரிவுகளில் 0.9 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

- *பப்பாசிச் செய்கையினை மேம்படுத்தல்*

இத் திட்டம் 0.3 மில்லியன் ரூபாய் நிதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

- *மரநடுகை*

யாழ் மாவட்டத்திலிலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1.29 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

# இந்தோனேசியாவில் பயங்கர நிலநடுக்கம்

# 44பேர் பலி; ஆயிரக்கணக்கானோர் வீடிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் முக்கிய தீவில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 7.3 ஆக




பதிவாகியது. இந்த நிலநடுக்கத்தில் 44 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர்.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாவில், தசிக்மலாயாவிற்கு தென்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியைச் சுற்றியுள்ள கடற்கரையோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை முதலில் விடப்பட்டது. அரை மணி நேரத்திற்குப் பின் மீளப் பெறப்பட்டது.

பூகம்பம் ஏற்பட்ட ஜாவா தீவு மக்கள் தொகை அதிகமுள்ள பகுதியாகும். இந்த பூகம்பத்தின் போது கட்டடங்கள் மற்றும் வீடுகள் குலுங்கின. மக்கள் பயந்து வீட்டை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர். அலுவலகங்களில் பணி புரிந்தவர்களும் வெளியே ஓடி வந்தனர்.

பூகம்பத்தில் 700 கட்டிடங்கள் இடிந்தன. இதில் இடிபாடுகளில் சிக்கி 44 பேர் பலியானார்கள். 110 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சியான்ஜுர் மாவட்டத்தில் நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் பாறைகளும், சேறும் சரிந்தன. இப்பகுதியில் வீடுகள் இடிந்தன. இங்கு இடிபாடுகளில் சிக்கி கிடந்த 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. பலரை காணவில்லை. அவர்களை தேடும் பணி நடைபெறுகிறது.

பூகம்பம் பாதித்த பகுதிகளில் பலரை காணவில்லை. எனவே, பலியானோரின் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இங்கு மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மருத்துவ குழுக்கள் அங்கு முகாமிட்டுள்ளன. மேலும் மீட்பு பணியில் ஆசிய நாடுகள் உதவ முன்வந்துள்ளன. (ஓ-6)

## ஹார்பூன் ஏவுகணை விவகாரம்

# பாகிஸ்தானின் ஆயுதங்களை சோதனையிட முடிவு

அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய ஆயுதங்களை பாகிஸ்தான் மாற்றி வடிவமைத்துள்ளதா என்பதை சோதனை செய்ய அதிபர் ஒபாமா முடிவு செய்துள்ளார். அது தொடர்பாக பாகிஸ்தானுடன் ஏற்கனவே அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது.

கடலில் கப்பலைத் தாக்கும் சக்தி வாய்ந்த ஹார்பூன் ஏவுகணைகளை அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் வாங்கியிருந்தது. அந்த ஏவுகணைகளை மாற்றிவடிவமைத்து தரையில் உள்ள இலக்குகளையும் அழிக்கும் வகையில் பாகிஸ்தான் உருவாக்கியிருக்கிறது. மேலும் கப்பல்களில் பயன்படுத்தும் போர் விமானங்களையும் தரையிலும் தாக்கும் வகையில் வடிவமைத்துள்ளது. இந்தத் தகவலை அமெரிக்க பத்திரிகை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மேலும் அமெரிக்க இராணுவ தளபாட ஏற்றுமதிச் சட்டத்தின்படி ஏற்றுமதி செய்யப்பட்ட கருவிகளை மாற்றி வடிவமைக்க முடியாது. ஆனால் அந்தச் சட்டத்தை பாகிஸ்தான் மீறி விட்டது. எனவே அமெரிக்க அதிபர் ஒபாமா மற்றும் அவருடைய மந்திரிகளும் உயர் அதிகாரிகளும் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதையடுத்து பாகிஸ்தானில் ஆயுதங்களை சோதனை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது. (ஓ-6)

# முஷாரப்பிற்கு சவூதி நேசக்கரம்

# பாக்.அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாராப்பிற்கு ஆதரவாக சவுதி அரேபிய அரசு களமிறங்கியுள்ளது. அவர் மீது பாக். அரசு ராஜதுரோக வழக்கு தொடுக்காமல் தடுக்கும் வேலைகளிலும் இறங்கியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாராப், நான்கு மாதங்களுக்கு மேலாக பிரிட்டனில் தங்கியிருந்தார். சமீபத்தில் அவர் லண்டனில் இருந்து சிறப்பு விமானம் மூலம் சவூதி அரேபியா வந்தார். அந்த விமானத்தை சவூதி மன்னர் அப்துல்லா, முஷாரப்பிற்காக அனுப்பியிருந்தார்.


சவூதி ராஜ குடும்பத்தின் விருந்தினராக, முஷாரப் அங்கு பல மாதங்கள் தங்கியிருக்கலாமென நம்பப்படுகிறது. தனி விமானத்தில் ரிஷாத் வந்த முஷாரப்பிற்கு ராஜ உபசாரம் அளிக்கப்பட்டு வருகிறது.

இது பாகிஸ்தான் அரசியல் வாதிகள் மத்தியில் வியப்பை உருவாக்கியுள்ளது. பாகிஸ்தான் அதிபராக முஷாரப் பதவி வகித்த போது 2007 ஆம் ஆண்டில் அங்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அது சட்ட விரோதம் என அந்நாட்டு மேல் நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பு வழங்கியது. இதனால், "முஷாரப் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உட்பட பலர் கோரி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில், முஷாரப்பிற்கு சவூதி அரேபிய அரசு ராஜ உபசாரம் அளிப்பது பல்வேறு சர்ச்சைகளை எழுப்பியுள்ளது. முஷாரப் மீது வழக்கு எதுவும் தொடரக்கூடாது என சவுதி மன்னர் குடும்பத்தினர் பாக் அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாம். குறிப்பாக நவாஸ் ஷெரீப் தன் கோரிக்கையை கைவிட வேண்டுமென வலியுறுத்தலாம் என்றும் நம்பப்படுகிறது. (ஓ-6)

# முட்டைக்குள் மற்றொரு முட்டை

முட்டையொன்றுக்குள் பிறிதொரு சிறிய முட்டை, ஓட்டுடன் முழுமையாக கண்டுபிடிக்கப்பட்ட அதிசய சம்பவம் பிரித்தானிய ஹியர் போர்ட் ஷியரில் இடம் பெற்றுள்ளது.



பண்ணை உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையமொன்றை நடத்திவரும் ஜெப் ரெய்லர் என்பவரே முட்டையொன்றை உடைத்தபோது அதனுள்ளே பிறிதொரு முட்டையொன்று இருப்பதைக் கண்டு பிடித்துள்ளார்.

இவ்வாறு முட்டையொன்றுக்குள் பிறிதொரு முட்டை உருவாகுவது மிகவும் அபூர்வமான நிகழ்வென தேசிய வரலாற்று அருங் காட்சியகத்தைச் சேர்ந்த டக்ளஸ் ரஸல் தெரிவித்தார். (ஓ-6)




# ஆபிரிக்க நாட்டில் வரலாறு காணாத வெள்ளம் ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்வு

(டகர்)



ஆபிரிக்க நாடான புர்கினா பசோவில் 90 வருடங்களுக்கு பிறகு வரலாறு காணாத அளவில் கடும் மழை பெய்து வருகிறது.

இதனால் அங்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஒருஇலட்சத்து 10 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர். பலர் தங்கள் உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மழை வெள்ளம் காரணமாக வீதிகள் பாலங்கள் அடித்து செல்லப்பட்டு விட்டன. இதனால் மீட்பு பணிகளை மேற்கொள்வதில் அதிகாரிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். நிவாரண பணியை மேற்கொள்வது குறித்து பிரதமர் டெர்டியஸ் ஷோங்கோ ஆலோசனை நடத்தி வருகிறார். (ஓ-6)

# பாக். இராணுவத்திடம் 105 தலிபான்கள் சரண்

(இஸ்லாமபாத்)



பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் நூற்றுக்கும் அதிகமான தலிபான்கள் சரணடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்திய பின் ஆட்சியை இழந்த தலிபான்கள், பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தஞ்சம் புகுந்தனர். பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் சுவாட் உள்ளிட்ட பகுதிகளை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்ட தால் அமெரிக்கா பாகிஸ்தானை எச்சரித்தது.

இதையடுத்து கடந்த மேமாதம் முதல் தலிபான்களை ஒடுக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் ஈடுபட்டு வருகிறது. இந்த சண்டையில் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் சுவாட் பகுதியில் தலிபான்களின் ஆதிக்கத்தை பாகிஸ்தான் இராணுவம் ஒடுக்கியுள்ளது. 105 தலிபான் பயங்கரவாதிகள் இராணுவத்திடம் நேற்று முன்தினம் சரணடைந்தனர். சரணடைந்தவர்கள் தங்களிடமிருந்த நவீன ஆயுதங்களை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.


இதுகுறித்து இராணுவ அதிகாரி சல்மான் அக்பர் குறிப்பிடுகையில், சரணடைந்த தலிபான்கள் பல கோரிக்கைகளை வைத்துள்ளனர். அவர்களுக்கு தண்டனை கொடுப்பது குறித்து நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். எனினும் சரணடைந்த தலிபான்கள் யாரும் விடுவிக்கப்படவில்லை என்றார். (ஓ-6)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணுசக்தியும் அணுஆயுதமும்

### அணுசக்தி

அணுசக்தி (கருச்சக்தியானது அணுவின் கருவிலிருந்து உருவாகும் ஒரு சக்தியாகும். உலகிலுள்ள பொருட்கள் யாவும் அணுவிலிருந்து உருவாகின்றன. அணுவானது நியுத்திரன்கள், புரோத்தன்கள், இலத்திரன்கள் என்பவற்றாலானது.




இரண்டு விதமான அணு வெடிப்புக்கள் யுரேனியம் (U-235) மூலம் இலகுவாக்கப்படுகின்றன.

1. கருப்பிளவு (Fission)
2. கருச்சேர்க்கை (Fusion)

கருப்பிளவானது ஒரு கருத்தாக்கம். இங்கு அணுக்கருவானது துண்டுகளாக பொதுவாக இருகூறுகளாக உடையும்போது ஏறக்குறைய நூறு மில்லியன் தொட்க்கம் பலநூறு மில்லியன் சக்தியினை வெளி விடுகின்றது. அணுக்குண்டு வெடிப்பின் போது இச்சக்தி பயங்கரமாகவும் அதிகளவிலும் வெளியேற்றப்படுகின்றது.

ஒரு கருச்சேர்க்கை தாக்கமானது வழக்கமாக கருப்பிளவுத் தாக்கம் மூலம் ஆரம்பிக்கப்படுகின்றது. ஆனால் கருப்பிளவுத் தாக்கம் மாதிரி இல்லாமல் ஐதரசன் குண்டு ஆனது பலதரப்பட்ட ஐதரசன் சமதானிகளின் கருக்களானது இணைந்து ஈலியம் கருவை உருவாக்கும்போது சக்தி பெறப்படுகின்றது.

$${}^{2}_{1}H + {}^{2}_{1}H \longrightarrow {}^{3}_{2}He + {}^{1}_{0}n$$

$${}^{2}_{1}H + {}^{3}_{1}H \longrightarrow {}^{4}_{2}He + {}^{1}_{0}n$$

தற்போது ஐதரசன் குண்டு தயாரிப்பானது கோவை வடிவிலேயே உள்ளது. ஐதரசன் குண்டு பற்றிய வேறு திட்டங்கள் ஒரு புறத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இயற்கையில் உள்ள பெரும்பாலான மூலகங்கள் யாவும் மிகவும் உறுதியான அணுக்களாகும். அத்துடன் ஆர்முடுக்கப்பட்ட துணிக்கைகளின் மோதுகை தவிர சுயாதீனமாக உடையது. பொதுவாக பரிசோதனை நோக்கங்களுக்கு, ஏனைய உலோகங்களுடன் ஒப்பிடுகையில் இலகுவில் பிளவடையக் கூடிய யுரேனியமானது பயன்படுத்தப்படுகின்றது. யுரேனியம் அணுவானது பெரிதாக இருப்பதனால் இதனை உறுதியாக பிளவுபடாமல் வைத்திருப்பது கடினமானது. U-235 ஆனது கருப்பிளவிற்கு விதிவிலக்கானது.

யுரேனியமானது பாரமான உலோகம். இது தங்கத்திலும் பாரமானது. இயற்கையில் உள்ள மூலகங்களில் பெரிதாக மாத்திரமில் லாமல் யுரேனியமானது புரோத்தன்களை விட அதிக நியூத்திரன்களைக் கொண்டுள்ளது. இது பிளவடையும் திறனை உயர்த்தாமல் ஆனால் வெடிப்பிற்குரிய திறனைக் கொண்டிருக்கிறது.

யுரேனியத்திற்கு இரு சமதானிகள் உண்டு. இயற்கையில்U-238சம தானி பெருமளவில் காணப்படுகின்றது. இது 92 புரோத்தன்களையும் 146 நியூத்திரன்களையும் கொண்டிருக்கின்றது. 0.6% U-235 சமதானி காணப்படுகின்றது. இதில் 143 நியூத்திரன்கள் உள்ளன. U-238 போல் அல்லாது U-235 சமதானி ஆனது பிளவுபடக்கூடியது. இதனால் சிதைவடையும் அத்துடன் அணுகுண்டு தயாரிக்க பயன்படுகின்றது.

U-238ல் நியூத்திரன்கள் அதிகமாக இருப்பதனால் நியூத்திரன்களை தெறிக்கச் செய்யும். ஆனால் U-235 சமதானி ஆனது நியூத்திரன்களை உறிஞ்சும். U-238 ஆனது அணுத் தாக்கத்தில் பங்குபற்றுவதில்லை. ஆனாலும் அது சிறந்த கேடயமாக குண்டு தயாரிப்பின் போது அணு உலையிற்கு வழங்குகின்றது.

U-238 ஆனது தவறுதலாக நடை பெறும் U-238ற்கு இடையேயான சங்கிலித் தாக்கத்தை தடுத்து உதவுகிறது. U-238 ஆனது சங்கிலித்தாக்கத்தை ஊக்குவியாது ஆனால் இது நிரம்பலடைந்த நியூத்திரன்களை உடைய Pu-239 ஐ உருவாக்க முடியும். புளுடோனியம் கருவானது சிதைவுறக்கூடியது. அத்துடன் அணுகுண்டில் U-235 ற்கு பதிலாக பாவிக்க முடியும்.

யுரோனியத்தின் இரு சமதானிகளும் இயற்கையில் கதிர்த்தாக்கம் உடையவை. இவற்றின் பெரிய அணுக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அழிந்து போகக்கூடியவை.

போதிய அளவு நேரம் தரப்படுமிடத்து யுரேனியமானது தொடர்ச்சியாக துணிக்கைகளை இழந்து ஈயமாக மாற்றமடையும்.


ஆயினும் இச்செயன்முறையை துரித்மாக்க முடியும். இச்செயன்முறை சங்கிலித் தாக்கம் எனப்படும். மெதுவாக அழிந்து போவதற்கு பதிலாக அணுக்கள் பலவந்தமாக நியூத்திரன்களால் உடைத்து கருவுடன் பலவந்தமாக போய்ச் சேருகின்றன.

U-235 அணுவானது மிகவும் உறுதியற்றது. ஒரு நியூத்திரனே அதை உடைக்க போதுமானது. அதன்பின் சங்கிலித்தாக்கம் நடைபெறச் செய்யும்.


தொடர்ந்து யுரேனியம் அணுவானது இரண்டு சிறிய மூலகங்களான பேரியமாகவும் கிரிப்தனாகவும் பிளவடையும்.



$${}^{235}_{92}U + {}^{1}_{0}n \longrightarrow {}^{236}_{92}U \longrightarrow {}^{92}_{36}kr + {}^{141}_{56}Ba + 3\,{}^{1}_{0}n + energy$$




U-235 இன் கருப்பிளவு




U-238 இல் இருந்து Pb - 206 ற்கான கதிர்த் தொழிற்பாட்டுத் தொடர்

U-235 அணு பிளவடையும் ,போது சக்தியானது வெப்பமாகவும் மிகவும் வலிமையுள்ள கதிரியக்கமுள்ள உயிருக்கு ஆபத்தான கதிராகவும் வெளியிடப்படும். இத்தாக்கம் நடைபெறும் போது பிளவடைந்த அணுவானது 2 அல்லது 3 பேரியம் அல்லது கிரிப்தன் உருவாகத் தேவையற்ற அதனுடைய மேலதிக நியூத்திரன்கள்ள தரும். இந்த மேலதிக நியூத்திரன்கள் போதியளவு வலுவுடன் வெளியேறி அவை வரும்போது சந்திக்கின்ற ஏனைய அணுக்களை தொடர்ச்சியாக பிரித்துக் கொண்டே செல்லும்.

இத்தொடர்ச்சியான தாக்கம் எண்கணித ரீதியாக இல்லாமல் கேத்திர கணித ரீதியாக நடைபெறும். இத்தாக்கம் மில்லியனில் ஒரு செக்கனில் நடைபெறும்.

சங்கிலித்தாக்கம் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தளவு தொகையானது மேல் அவத்தைத்திணிவு (Supercritical mass) எனப்படும்.

இச் சங்கிலித்தாக்கத்திற்கு தேவையான உண்மையான திணிவானது மூலப் பொருட்களின் தூய்மையில் தங்கியிருக்கும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

செல்வி
சிவநயனி நாகேந்திரன்
செய்முறை காட்டுநர்
இரசாயனவியற்துறை

### புதிர் 2 இற்கான விடை

James Watson
Francis Crick

### வாரத்திற்கு ஒரு புதிர்! ③

ஓசோன் ($O_3$) படலம் புவியின் மேற்பரப்பில் இருந்து எத்தனை கி.மீ (KM) உயர இடைவெளியில் காணப்படுகிறது.

விடைகளை 16.09.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி


Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna.
Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல. 03

சரியான விடை :.................................................
முழுப்பெயர் :.................................................
முகவரி :.................................................
:.................................................
கையொப்பம் :.................................................

# உங்கள் தோழனாக கொண்ட்ரோல் பனல்...






நம் கணனி வீட்டில் பொருட்களை அமைத்து அவற்றைப் பயன்படுத்தி அதிக பட்ச பயன்கள் பெறும் வகையில் விண் டோஸ் நமக்குத் தரும் ஓர் இடம் கொண்ட் ரோல் பனல் ஆகும். இதன் பகுதிகள் மற்றும் அவை தரும் செயல்பாடுகளை உணர்ந்து கொண்டு இயக்கினால் தான் நாம் நம் கணனியில் அதிகபட்ச பயன்களைப் பெற முடியும்.

முதலில் கொண்ட்ரோல் பனல் பகுதியில் என்ன என்ன அமைக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கலாம். ஸ்டார்ட்(Start) பட்டனைக் கிளிக்செய்து வரும் மெனுவில் கொண்ட்ரோல் பனலைத் (Control Panel) தேர்ந்தெடுத்து என்டர் செய்திட கொண்ட்ரோல் பனல் கிடைக்கும். விண் டோஸ் எக்ஸ்பி வைத்திருப்பவர்களுக்கு கிளாசிக் வியூ கற்றக்கரி வியூ (Classic View/ Category View) என. இருவகை க்ளில் கிடைக்கலாம்.இதில் கிளாசிக் வியூ வினை தேர்ந்தெடுத்து வியூவை மாற்றி வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு மாற்றிக்கொள்வதற்கான வசதி கொண்ட் ரோல் பனல் கட்டத்தில் இடது பக்கப் பிரிவில் மேலாகத் தரப்பட்டுள்ளதைக் காணலாம். அதில் கிளிக் செய்து கிளாசிக் வியூவைப் பெறவும் விண்டோஸ் 95 அல்லது 98 பயன்படுத்தியவர்களுக்கு இந்த ஒரு வியூ மட்டுமே கிடைப்பதால் அதனை வைத் திருப்பவர்களுக்குப் பிரச்சினை இருக்காது.

### சிஸ்டம்

கொண்ட்ரோல் பனல் தொகுப்பில் மிக மிக முக்கியமான ஒரு பிரிவு உள்ளதென் றால் அது சிஸ்டம் (System) எனப் பெயரி டப்பட்டதுதான். உங்களுடைய கணனியின் செயற்பாட்டின் பெரும் பகுதியைக் கட்டுப் படுத்தும் அனைத்தும் இந்த பிரிவில் தான் உள்ளன. இதன் மீது இரண்டு முறை கிளிக் செய்தால் ஏழு டேப்கள் அடங்கிய ஒரு டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இதில் முதலா வது (Generan) என்ற டேப் ஆகும்.

இதில் நீங்கள் பயன்படுத்தும் ஓப்பரேட் டிங் சிஸ்டம் எது எனக் காட்டும். உங்கள் கணனியில் பதிந்துள்ள சேர்வீஸ் பக் எதுவென்றும் இங்கு தெரிந்து கொள்ள லாம். இவற்றுடன் கணனியில் உள்ள பிரோசசர். அதன் வேகம் கணனிமெமரியின் அளவு ஆகியவையும் தெரியவரும். உங்கள் கணனி ஏதேனும் பிரச்சினை என்றால் அது குறித்து ஆய்வு செய்கையில் இவை உங்களுக்குப் பயன் படும். கணனியில் ஏதேனும் பழுது ஏற்பட்டு அது குறித்து உங்கள் மெக்கானிக் டெலிபோனிலேயே சில தகவல்கள் கேட் டால் அப்போது இதனைப் பார்த்துத் தான் தகவல்களைத் தர வேண்டியதிருக்கும்.

### கொம்பியூட்டர் நேம் (Computer Name)

அடுத்ததாக உள்ள கொம்பியூட்டர் நேம் என்னும் டேப் உங்கள் ஹோம் நெட்வோர்க்கில் இணைந்திருந்தால் உதவிடும்.

### ஹார்ட்வெயர் (Hardware)

அடுத்தாக உள்ள ஹார்ட்வெயர் என்னும் டேப் பைக் கிளிக் செய்து கணனியில் உள்ள மற்றும் வெளியே இணைக்கப்பட்டுள்ள சாத னங்களைச் சோதனை செய்திடவும். மாற்றி அமைத்திடவும் முடியும். இதனைக் கிளிக் செய்தால் வரும் திரையில் டிவைஸ் மனேஜர் (Device Manager) என்று ஒரு பிரிவு கிடைக்கும்.

இதனை இயக்கினால் கணனியில் உள்ள சாதனங்களின் பட்டியல் கிடைக்கும். இவற்றில் முக்கியமானவை -டிஸ்க் டிரைவ் கள். மொனிட்டர் நெட்வொர்க் கார்டு மொடம், ஸ்கேனர், யு.எஸ்.பி, கொண்ட்ரோலர்ஸ் ஆகியவை ஆகும்.

இந்த ஒவ்வொன்றிலும் அதன் உட் பிரிவு களாக என்ன உள்ளது என்று அறிய விரும்பினால் அதன் இடது ஓரம் உள்ள +(பிளஸ் ) அடையாளத்தின் மீது கிளிக் செய்தால் அதன் பிரிவுகள் கிடைக்கும். எந்த ஒரு சாதனத்தின் பெயர் அருகே ஒரு மஞ்சள் வண்ண ஆச்சரியக் குறி இருக்கி றதோ அந்த சாதனம் சரியாகச் செயல்பட வில்லை என்று பொருள்.நீங்கள் சேர்வீஸ் இஞ்சினியர் யாரிடமாவது உங்கள் கணனி சாதனம் செயல்படா தன்மை குறித்து பேசப் போகிறீர்கள் என்றால் இவற்றை எல்லாம் குறித்து வைத்துக் கொண்டு பேசவேண்டும்.

டிவைஸ் மனேஜனர் செட்டிங் எதனையும் அவற்றின் நிலை தெரியாமல் மாற்றுவது தவறு. இதனால் ஒழுங்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் கணனி செயற்படாமல் போகலாம்.

அடுத்த பிரிவில் உள்ள டிரைவிவர் சைனிங் பட்டன் உங்கள் கணனிக்கு மைக்ரோசொப்ட் அங்கீகாரம் செய்யாத டிரைவர்களை அதன் சாதனங்களுக்கு பயன்படுத்தும் வழியைத் தருகிறது. இதனை அப்படியே கிடைத்ததுபோல் (Default) வைத்திருப்பது நல்லது. (தொடரும்)

# யாழில் கணனி பட்டப்படிப்புக்களை வழங்கும் North Lanka IIT நிறுவனம்



North Lanka IIT ஆனது, யாழ்ப்பாணத் திலே இயங்குகின்ற கணனி உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்புக்களை முதன்மைப்படுத்தி இயங்கும் ஒரு முன்னணி நிறுவனமாகும்.இது பிரதான வீதி, சங்கா னையிலும் இல.113,லக்சன் பிளாசா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிகளில் இயங்கி வருகின்றது.

இக் கணனி உயர்கல்வி நிறுவனத்தில் முக்கியமாக 1.B.Sc.in Computer Science., 2.B.Sc. in Multimedia - 1st Year. ஆகிய இரண்டு பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகள் நடைபெற்றுவருகின்றது.

இவ்விரு கற்கைநெறிகள் தொடர்பிலும் மாணவர்களுக்கு தமது நிறுவனத்தால் வழங்... ...சதிகள் தொடர்பிலும் இவ்வாறு விளக்குகின்றார் North Lan... IIT நிறுவனப் பணிப்பாளர் ஏ.பாலசுப்பிரணியம்.

B.Sc. in Computer Science கற்கை நெறி HND OR A/ L OR O/L தகைமை களுடன் 1-3 வருடங்களில் எமது நிறுவனத் திலேயே பயின்று தமது பட்டச் சான்றி தழை(Degree Certificate) இங்கேயே பெற்றுக்கொள்ள முடியம்.

இக் கற்கைநெறியின்போது Diploma, Graduate Diploma, Degree ஆகிய 3 வகை சான்றிதழ்களை ஒரே தடவையில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படிDiploma ஆனது 2ம் Semester ஐ பூர்த்தி செய்த பின் Cambridge Association of Managers -UK இனால் வழங்கப் படும்.இதுUK Quality Assurance Commission இனால்Validate செய்யப்பட்டதும் Cambridge Acadamy of Management இனால் Endorse செய்யப்பட்டதுமாகும்.

இதே தரமுடைய Graduate Diploma சான்றிதழ் 4ம் Semester, முடிவில் வழங் கப்படும்.

இவ்வாறான வசதியானது மாணவர்கள் பாடசாலை மட்டத்திலிருந்தே பட்டதாரியாகும் சூழலை ஏற்படுத்துகின்றது.


ஒரு மாணவன் பாடசாலை மட்டத்தில் Diploma, Advanced Diploma சான்றிதழ் களைப் பெற்று , பின்பு Degree சான்றிதழ்களைப் பெறமுடியும்.

6ம் Semester முடிவில் Isles International University (Commonwealth) இனால் இலங் கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் (UGC) அங்கீகாரமுடைய Degree Certificate ஐப் பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி Isles Inernational Universite இனது அங்கீகாரங்களில் சில...

1)Received accreditation granted from the Academia Europeans d' Informatisation estab lished in Brussels, Belgium, by Order of the king of Belgium Albert II
2) Professional Recognition from Indian Manage ment Academy (INDIA)
3) Academic Recognition From Eastern Asia Uni versity Thailand
4) Professional Recognition United Kingdom
5) Ministry of Justice - Belgium
6) European Commission Education and Training - European Union
7) Ministry of Education in the United Kingdom
8) Business Intelligence Service of London, UK
9) International Academy of Science (IAS) -Germany
10) SPARC Europe -European Union
11.DOAJ- Sweden

இப்பல்கலைக்கழகமானது North Lanka IIT இனை தமது Partner Insitution ஆக அங்கீகரித்து இதற்கான ஒப்பந்தத்தினை மலேசியா சர்வதேச அலுவலகத்தில் கையொப் பமிடப்பட்டுள்ளது.


எதிர்வரும் நவம்பர் 27 இல் Cambodia வில் நடைபெறும் IIU இனது இவ் வருடத் திற்கான் 7 ஆவது பட்டமளிப்பு விழாவில் எமது நிறுவனம் ஊடாக பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பும், North Lanka IIT இனை IIU-இனது வலைப் பின்னலில் இணைப்பதற்கான விருதும் Cambodia ஜனாதிபதியினால் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.


Isles International University
Commonwealth
Upon recommendation of the Academic Senate and by virtue of the Authority and Power vested in them by the Constitution The Board of Trustees confers upon
J.D.R.W Perera
The international degree of
Bachelor of Information Technology
(Networking)
With all the Rights, Privileges and Dignities thereto pertaining In witness whereof the seal of the University and the signature of the duly authorised official is affixed.
Dated this June 4, 2009
Chancellor.
SAMPLE

இப்பல்கலைக் கழகம்பற்றிய மேலதிக விபரங்களை www.iiuedu.eu இணையத்தில் பார்வையிடலாம். மற்றும் North Lanka IIT இனது மேலதிக விபரங் களைwww.north lanka iit.com, www.nliit.com இணையத்தில் பார்வையிடலாம். இப் பட்டப்படிப் பைத் தொடர்ந்து M.Sc.in Computer Science கற்கைநெறியை பயிலக் கூடிய வசதியும் North Lanka IIT இலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

அல்லது உயர் கல் வியை வெளிநாடுகளில் தொடரக்கூடிய ஒழுங்குகளும் செய்து தரப்படும். இக் கற்கைநெறியில் ஆசிரியர்கள், தனியார் துறையில் (கணனி துறைசார்) வேலை செய்ப வர்கள் மற்றும் BIT பூர்த்தி செய்யா தவர்கள், HND தகைமையுடையவர்களுக்கு கற்கை நெறிக் கான காலம் நெகிழ்ச்சியுடையது.

அடுத்த கற்கை நெறியான B,Sc,in Multimedia ஆனது Multimedia துறையில் ஒரு வருட பட்டப்படிப்பை எமது நிறுவனத்திலும், 2ம் ,3ம்வருட பட்டப் படிப்பினை வெளி நாடு ஒன்றி லும் தொடரமுடியும்.இக் கற்கைநெறியானது Nottingham College of London உடன் இணைந்து நடாத்தப்படுகிறது. O/L தகைமை போதுமானது.


CAMBRIDGE
Association of Managers
It is hereby certified that
MAKHETI WANJALA AMBROSE
has fulfilled all the required examinations and in testimony thereof has been awarded
GRADUATE DIPLOMA
IN MANAGEMENT (GENERAL)
The seal and signature of the authorised officials are affixed at Cambridge, England.
Dated this 9th May 2009
Chancellor
Academic Registrar
Endorsed by
Validated by
CAM
SAMPLE

1st Semister முடிவில் Diploma in multimedia - Semister1,2nd Semister முடிவில் Diploma in Multimedia -Semister11 சான்றிதழ்கள் Nottingham College of London இனால் வழங் கப்படும்.

மூன்று வருடங் களையும் வெளி நாடுகளிலேயே கற்க முடியும். இருப் பினும் 1 ஆம் வருடத் தில் பகுதிநேர வேலை வாய்ப்பை ஒழுங்கு செய்து தர முடியாது. இது 2ஆம் வருடத்தி லேயே சாத்தியமாகும். பகுதி நேர வேலைவாய்ப்பின் மூலம் மாதம் ஒன்றிற்கு $ 1500 (USD) யை பெறக்கூடியதானது அத்துடன் 1ஆம் வருடம் வெளிநாட்டில் தேவைப்படும் செலவில் 1/20 பங்கு செலவு எமது நிறுவனத்தில் கற்பதற்கு போதுமானது.

முக்கியமாக 2ஆம், 3ஆம் வருட பட்டப் படிப்பினை Netherlands,Italy, Malta நாடுகளின் பல்கலைக்கழகங் களில் தொடர்வது வரவேற்கத்தக்கது. பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்பு நிரந்தர வதிவிட உரிமையை (PR) பெறக்கூடிய வசதியிருப்பதாலும் Sponsor தேவையில்லை என்பதாலும் IELTS தேவையில்லை என்பதாலும் மேற்படி நாடு களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதிப் படுத்தப்படுவதாலும் மேற்படி நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்ப்டு கிறது.

Italy நாட்டிற்கு தவணை முறைக் கட்டணமும் அனுமதிக்கபடுவதனால் மாண வர்கள் தமது உழைப்பிலே மிகுதிப்பணத்தை செலுத்த முடியும்.

UK,Canada போன்ற நாடுகளுக்கும் அந்நாட்டு நடைமுறைகளுக்கு அமைவாக Student Visa பெற்றுத்தரப்படும்.

இக்கற்கை நெறிக்கான நேரடி அனும திகள்Nottingam College of London Director இனால் 4 ,5 ஆம் திகதிகளில் (North Lanka IIT யாழ் நிறுவனத்திலும் 6ஆம் திகதி நெல்லியடி மகாவித்தியாலயத்திலும் வழ்ங்கப் படவுள்ளது.

இதன்போது ஏற்கனவே 1st semester பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றி தழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. இவை மட்டுமல்லாது அனைத்து Diploma கற்கைநெறிகளும் முற்றிலும் செய்முறை களை உள்ளடக்கி நடைபெற்று வருகின்றது என்றார்.

## இன்று ஒரு தகவல்

# சுவர்க்க வாழ்க்கை

யோகவசிஷ்டம் என்ற நூலிலுள்ள ஒரு கதையை இப்போது நாம் பார்ப்போம்.

அரிஷ்டரேமி என்ற மன்னர் இருந்தார். அவர் அரசை தன் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டுக் காட்டுக்குச் சென்று தவம் செய்யத் தொடங்கினார். மிகவும் நல்லவர். ஏராளமான புண்ணிய காரியங்களைச் செய்தவர். அப்படிப்பட்டவர் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்து இந்திரனுக்கு நடுக்கத்தை உண்டாக்கியது.

அரிஷ்டரேமி கடும் தவத்தில் ஈடுபட்டால் அவருக்கு தவப்பயன் அதிகமாகி விடும். அதனால் இந்திரப் பதவிக்கு ஆபத்து ஏற்படுமோ? என்று கலங்கினான் இந்திரன்.

இந்திரப் பதவிக்கு நேர்ந்துள்ள ஆபத்தை எப்படித் தவிர்ப்பது? என்று யோசனை செய்தான். அரிஷ்டரேமியால் இந்திரப் பதவி பறிபோவதை விட, அவரைச் சுவர்க்கத்துக்கு அழைத்துவந்து, தன் ஆளுகைக் குட்பட்ட தேவர்களில் ஒருவராக்கி விட முடிவு செய்தான்.

உடனே ஒரு தேவதூதனை அழைத்து, தேவலோக விமானத்துடன் பூலோகம் சென்று அரிஷ்டரேமியை கையோடு சுவர்க்கத்துக்கு அழைத்து வரச் சொல்லி உத்தரவிட்டான்.

தேவதூதன் தேவலோக விமானத்துடன் அரிஷ்டரேமி தவம் செய்து கொண்டிருந்த ஆச்சிரமத்தை அடைந்தான். அவரிடம் இந்திரன் தெரிவித்த விடயத்தைக் கூறினான்.

அதற்கு அரிஷ்டரேமி, "இதோ பார்! நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு முதலில் பதில் சொல். சுவர்க்கத்தில் என்னென்ன வசதிகள், குணங்கள் இருக்கின்றன? என்னென்ன குறைபாடுகள், தோஷங்கள் இருக்கின்றன? அதாவது அங்குேயுள்ள நல்லது கெட்டது என்னென்ன என்று முதலில் நீ சொல். அதன் பின் உன்னுடன் சுவர்க்கத்துக்கு நான் வரலாமா? வேண்டாமா? என்பது பற்றி முடிவு செய்கிறேன்! என்றார்.

"இந்த உலகத்தில் மக்கள் செய்யும் புண்ணியத் திற்கேற்ப மறுமையில் அவர்களுக்கு சுவர்க்க வாழ்க்கை அமைகிறது. உத்தம புண்ணியம் செய்தவர்களுக்கு உத்தம சுவர்க்கம் கிடைக்கிறது. மத்திய புண்ணியம் செய்தவர்களுக்கு மத்திம சுவர்க்கம் கிடைக்கிறது. சுவர்க்கத்தில் கூட அவரவர் செய்த புண்ணியத் திற்கேற்ப உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு உண்டு" என்றான் தேவதூதன்.

அதற்கு "அப்படிப்பட்ட அந்தச் சுவர்க்கம் எனக்கு வேண்டாம்! என்று சொல்லிவிட்டார் அரிஷ்டரேமி.

ஏனென்றால், அவரது நோக்கம் சுவர்க்க இன்பம் அனுபவிப்பதோ, இந்திரன் ஆவதோ அல்ல. மாறாக முத்தியின்பம் பெறுவதே அவரது முடிவான இலட்சியமாக இருந்தது.

சுவர்க்க வாழ்க்கை என்றும் நிலையானதல்ல. நாம் செய்யும் புண்ணியம் கரையும் வரையில் தான் நாம் இருக்க முடியும். புண்ணியம் தீர்ந்தவுடன் மீண்டும் பூமியில் வந்து ஏதாவது ஒரு ஜீவனாகப் பிறக்க வேண்டும்.

எனவே தான், "பிரம்மத்துடன் ஐக்கியமாக வேண்டும். என்று மக்கள் விரும்ப வேண்டும். அதுதான் முக்கியம்" என்கிறார்கள் பெரியவர்கள்.

மனம் பக்குவமானால் சுவர்க்க இன்பம் எப்படியிருக்கும் என்பதை உணர முடியும். சுவர்க்கமும் நரகமும் கண்ணால் பார்க்கும் விடயங்கள் இல்லை. அவை அனுபவித்துணரும் விடயங்கள்.

எல்லோரும் சுவர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறோம். ஆனால் நரகத்துக்குப் போவதற்குரிய செயல்கள் என்னென்ன உண்டோ அவ்வளவையும் தவறாமல் செய்து கொண்டிருக்கின்றோம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நியமனம் வழங்கப்படவுள்ளோருக்கான அழைப்புக் கடிதங்கள் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர், கலாச்சார உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகிய பதவிகளின் வகுப்பு II பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட 16 பேரின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திருகோணமலை, வரோதய நகர், கன்னியா வீதியில் அமைந்துள்ள வட மாகாண சபை கட்டடத் தொகுதியின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்களை இன்று 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 48, காட்டுக் கந்தோர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார்.

தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் விபரம் வருமாறு,

**சமூக சேவை உத்தியோகத்தர்**

முகுந்தன் விஜயகுமாரி (நாயன்மார்கட்டு).

**கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்**

சி. அகிலன் (கரவெட்டி), சா. சிவலிங்கம் (கோப்பாய்), ம. தயாபரன் (அளவெட்டி), இ. பரணிகரன் (கொக்குவில்).

**நன்னடத்தை உத்தியோகத்தர்**

சி. சிவபாலசுந்தரம் (கொக்குவில்), செ. நாகராஜா (யாழ்ப்பாணம்), பொ. சிவகுமார் (சுதுமலை), ம. மதிதாஸ் (புலோலி), சி. நிசந்திலா (கோப்பாய்).

**கலாச்சார உத்தியோகத்தர்**

கு. பாலசண்முகன் (கொக்குவில்), க. அமலதாஸ் (தாவடி), செ. தமிழ்செல்வி (சுன்னாகம்), இ. இராஜ்கன்னா (உடுப்பிட்டி), ம. மேர்சி சுஜந்தினி (நாவாந்துறை), ச. நிருபா (சித்தன்கேணி). (ஓ)

# நலன்புரி நிலையங்களிலிருந்து 550 முதியவர்கள் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 550 முதியவர்கள் நேற்று முன்தினம் அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் வவுனியா கோவில், குளம் கோவில் நிர்வாக சபையினால் பொறுப்பேற்கப்பட்டனர்.

செட்டிகுளம் மெனிக் பாம் நிவாரணக் கிராமத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம் 300 முதியவர்களைப் பொறுப்பேற்றதுடன் வவுனியா கோவில் குளம் கோவில் நிர்வாகம் 250 முதியவர்களைப் பொறுப்பேற்றது.

இவர்கள் திருக்கேதீஸ்வரம், சமன் குளம் முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஆண்டிய புளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 300 இடம் பெயர்ந்த குடும்பங்கள் மருதமடு நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலையை இயங்க வைப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே இக்குடும்பங்கள் இடமாற்றப்பட்டன. (ஓ-6)

# மாகாணவாரியாக பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான வதிவிடச் செயலமர்வு

(அல்வாய்)

கல்வியின் தரத்தை உறுதி செய்வதுடன் அவற்றை திறன் மிக்கதாக்குவது தொடர்பாக மாகாணவாரியாக பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான வதிவிட செயலமர்வு கல்வி அமைச்சின் பின்பக்க நுழைவாயிலில் அமைந்துள்ள சிற்ரக் (CETRAC) பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் இடத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 4 மணி முதல் பி.ப 8 மணி வரையும். 18 ஆம் திகதி முற்பகல் 8 மணி முதல் பி.ப 4 மணி வரையும் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகளில் கலந்து கொள்ளும் சகல பயிற்சியாளர்களுக்கும் தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இச் செயலமர்வுக்காக மாகாண வாரியாக தெரிவு செய்யப்பட்ட சகலரும் தவறாது கலந்து கொள்வதுடன் உரிய நேரம் வரை செயலமர்வில் சமூகமளித்தல் அவசியம் எனவும் கல்வியமைச்சின் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார்.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட யாராவது சமூகமளிக்க முடியாதிருந்தால் அவர்களுக்குப் பதிலாக சம தகைமையுடைய உத்தியோகத்தர்களை சமூகமளிக்கச் செய்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ-9-19)

# இராசி பலன்

04.09.2009
(ஆவணி 19, வெள்ளிக்கிழமை)
பூரணை முன்னிரவு 9.42 மணிவரை
சதயம் பின்னிரவு 1.55 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், பெருமையடைதல். |
| இடபம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | சகோதரர் உதவி, அதிக பிரயாசை, புதிய முயற்சி, கட்டுப்பாடு. |
| கடகம் | எதிர்பாராத அச்சம், காரிய தாமதம், பணக்குறைவு, போசன சுகம். |
| சிங்கம் | திடீர் பயணம், கலந்துரையாடல், காரிய நன்மை, போசன சுகம். |
| கன்னி | பணவருவாய், தெய்வசிந்தை, தேகநலன், சத்துருஜெயம். |
| துலாம் | அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு, பண விரயம். |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், சுபநிகழ்வு, பயந்தசுபாவம், பயணம். |
| தனுசு | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை. |
| மகரம் | மனக்கிலேசம், தனவிரயம், காரியதாமதம், மாதர் நட்பு. |
| கும்பம் | தெய்வசிந்தை, போசன சுகம், பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி. |
| மீனம் | உணர்ச்சிவசப்படல், தொழில் நன்மை, பிரயாணம், முயற்சி தாமதம் |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 30 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 100 | 120 | 80 |
| கரட் | 90 | 100 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 40 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 35 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 90 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 15 | 15 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 85 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 |

## இடம்பெயர்ந்த மக்களுக்கு

# பிரேம் ராவத் மன்றத்தினால் 20 ஆயிரம் டொலர் நிதி அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குப் போஷாக்கு உணவு வழங்குவதற்காக 20 ஆயிரம் டொலர் நிதியை பிரேம்ராவத் மன்றம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்துள்ள மக்களுக்காக இந்த நிதி ஜீவ சக்தி நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக பிரேம் ராவத் மன்றத்தின் தலைவியாகிய திருமதி லிண்டா பஸ் கொட்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் சமாதானத்திற்கான செய்தியைப் பரப்பி வருகின்ற அறிஞரான மகாராஜியார் பெயரில் செயற்பட்டு வருகின்ற பிரேம் ராவத் மன்றம் உலகெங்கும் மகராஜின் சமாதான செய்தியை எடுத்துச் செல்வதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் பணியாற்றி வருகின்றது.

இதன் ஓர் கட்டமாகவே இலங்கையிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படுகிறது. இதுகுறித்து மேற்படி மன்றத் தலைவி லிண்டா மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களோடும் எமது இதயங்கள் நெருங்கிச் செல்கின்றன. சொந்த இடங்களை விட்டு அகதி முகாம்களிலும் குடியிருப்புகளிலும் தஞ்சமடைந்துள்ள மக்கள் குறித்து நாங்கள் விசேட அக்கறை கொண்டிருக்கிறோம். இவர்கள் தங்களுக்குத் தேவையான போஷாக்கினைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் சில வேளைகளில் கடுமையான உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

சோர்ந்து களைத்துள்ள வேளையில் யுத்தத்தின் பாதிப்புகளை எதிர்கொள்வது மிகவும் கடினமானதாக இருக்கும்.

காய்கறிகள், முட்டைகள், தானியங்கள் உள்ளிட்ட ஆரோக்கியத்திற்குத் தேவையான போஷாக்கான உணவுகளை இரண்டு மாதங்களுக்கு அவர்கள் இந்த உதவியின் மூலம் பெறக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் அவர்கள் இதன் மூலம் உடல் வலுவையும் மன ஆறுதலையும் பெறக்கூடியதாக இருக்கும்என்றார். (ஓ-6)

# பிலியந்தலையில் கடத்தப்பட்ட சிறுவன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளான்

(கொழும்பு)



பிலியந்தலையில் கடத்தப்பட்ட சிறுவனைப் பொலிஸார் மீட்டுள்ளனர். ஆட்டோ சாரதி ஒருவர் கொடுத்த தகவலையடுத்து சிறுவனை மீட்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

விளையாடுவதற்குப் பட்டம் ஒன்றை வாங்கித் தருவதாகக் கூறி ஆசைகாட்டி மேற்படி சிறுவனை இனந்தெரியாத நபர்கள் அழைத்துச் சென்றுள்ளனர்.

பிலியந்தலையில் இல. ஒன்று சிங்கள கனிஷ்ட பாடசாலையில் கல்வி கற்று வரும் பெத்தும் மினிந்த என்னும் 9 வயது சிறுவனே நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

சம்பவ தினத்தன்று பிலியந்தலை கனேவத்தை தேவாலயத்தில் பிற்பகல் வேளையில் தனது நண்பர்களோடு பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்த போது தேவாலயத்தில் கூலி வேலை செய்வதற்காக வந்திருந்த இருவர் பட்டம் வாங்கித் தருவதாகக் கூறி சிறுவனை பிலியந்தலை நகரத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விளையாடச் சென்ற சிறுவன் மாலையாகியும் வீடு திரும்பாததால் அவரது பெற்றோர் பிலியந்தலைப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சிறுவன் கடத்தப்பட்ட விடயம் வெளியானது.

தொலைக்காட்சிச் செய்தியில் சிறுவனது புகைப்படத்தைப் பார்த்த ஆட்டோ சாரதியொருவர் அவரை ஒரு நபருடன் கண்டதாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்திருந்தார்.


இதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் சிறுவனை மீட்டதோடு சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (ஓ-6)

# அணுசக்தியும் அணுஆயுதமும்......

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தூய யுரேனியம் 110 பவுண்ஸ் (50 கிலோ கிராம்) போதுமானது.

ஆனால் இயற்கையில் யுரேனியம் தூய்மை அற்றது. எனவே உண்மையில் அதிகளவு யுரேனியம் தேவையாகும்.



U-235 இன் சங்கிலித்தாக்கம்

அணுகுண்டுத் தயாரிப்பில் யுரேனியம் மாத்திரம் மூலப் பொருளாக பயன்படுத்துவதில்லை. மாற்று மூலப் பொருளாக புளுடோனியம் மூலகத்தின் சமதானி Pu-239 பயன்படுகிறது. புளுடோனியம் இயற்கையில் காணப்படுவதில்லை. அது யுரேனியத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. புளுடோனியத்தை யுரேனியத்திலிருந்து தயாரிக்க ஒரே வழி U-238 ஐ அணு உலையிலிருந்து உற்பத்தி செய்வதாகும். குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு செறிவான கதிரியக்கமுடைய உலோகம் வேறு துணிக்கைகளை ஈர்த்துக் கொண்டு அணுக்களானது புளுடோனியமாக மாறும்.

புளுடோனியமானது தானே சங்கிலித் தாக்கத்தை ஆரம்பிக்காது. ஆனால் நியூத்திரன் முதலை நிவர்த்தி செய்வது கடினமானது. கதிரியக்கமுடைய பொருட்கள் புளுடோனியத்திலும் விரைவாக நியூத்திரன்களை வழங்கும். சில குறிப்பிட்ட குண்டுகளில் பெரிலியத்தினதும் (Be) பொலோனியத்தினதும் (Po) கலவை தாக்கத்தை தூண்ட உதவும். இதன் சிறிதளவே போதுமானது. இதுதான் சிதைவுறக்கூடியது அல்ல. ஆனால் பெருமளவு தாக்கங்களில் ஊக்கியாகப் பயன்படும்.

### அணுவாயுதம்

அணுவாயுதம் சக்தியை கருத்தாக்கங்களாகிய கருப்பிளவு, கருச்சேர்க்கை இருந்து பெறுகின்றது. சிறிய அணுவாயுதமாக இருந்தாலும் மிகவும் வலுவுள்ளது. 100 மெகா தொன் சக்தி வாய்ந்த ஆயுதமானது 60 தொடக்கம் 100 மைல் விட்டமுள்ள மரவீடுகளையும் காடுகளையும் அழிக்க வல்லது.

முதலில் அணுகுண்டானது இங்கிலாந்தின் உதவியுடன் Manhattan இரகசியத்திட்டத்தின் அடிப்படையில் அமெரிக்காவால் உலக யுத்த காலத்தில் உருவாக்கப்பட்டது. நாசி ஜேர்மனி அணுவாயுதங்களை உற்பத்தி செய்து விடுமோ என்ற பயத்தால் தான் முதல் அணுவாயுதங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவை யப்பான் நகரங்களாகிய Hiroshima விலும் Nagasaki யிலும் பாவிக்கப்பட்டன.

1945 ஆகஸ்ட் 6 ஆம் திகதி காலையில் "Little Boy" எனப் பெயரிடப்பட்ட யுரேனியம் குண்டு Hiroshima வில் போடப்பட்டது. மூன்று நாட்கள் கழித்து "Fat man" என்று பெயரிடப்பட்ட புளுடோனியம் குண்டு Nagasaki யில் போடப்பட்டது.

சோவியற் யூனியன் அமெரிக்காவில் உளவாளிகள் மூலம் பெற்று தங்கள் முதல் அணுவாயுதத்தை உருவாக்கி 1949 ஆம் ஆண்டு பரிசோதித்தது. 1950 ஆம் ஆண்டு நடுப்பகுதிகளில் அமெரிக்காவும் சோவியற் யூனியனும் கருச் சேர்க்கை அடிப்படையிலான ஆயுதங்களை உருவாக்கினார்கள். அத்துடன் நம்பகரமான றொக்கெட் ஏவுமுறையினை கண்டுபிடித்தார்கள். 1960 ஆம் ஆண்டுகளில் அணுவாயுதங்களை குறுகிய காலகட்டத்தில் உலகின் எந்தப் பாகத்திற்கும் விநியோகிக்கக் கூடிய நிலை ஏற்பட்டது.

அணுவாயுதங்கள் தேசிய, இராணுவ சக்திகளில் அடையாளங்களாக விளங்குவதுடன் அணுவாயுத பரிசோதனைகள் அடிக்கடி நடத்துவதன் நோக்கம் புதிய வடிவங்களுடன் அரசியல் செய்திகளை அனுப்புவதுமாகும். இக்காலகட்டத்தில் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளும் அணுவாயுதங்களை உருவாக்க தொடங்கின. அணுவாயுத அமைப்பில் அடங்கிய இந்த 5 அங்கத்தவர்களும் அணுவாயுதங்களை இந்தியா, தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு கட்டுப்பாட்டுடன் வழங்க இணங்கிக் கொண்டார்கள்.

பனிப்போர் 1990 ஆம் ஆண்டில் முடிபுக்கு வந்த காலத்தில் ரஷ்யா சோவியற் யூனியனின் ஆயுதங்களை தமதாக்கிக் கொண்டது. அத்துடன் அமெரிக்காவும் கூடிய உள்நாட்டு பாதுகாப்பிற்காக சேகரித்த ஆயுதங்களை குறைக்க இணங்கிக் கொண்டார்கள். அணுப்பாவனை தொடர்ந்தது.

பாகிஸ்தானும் இந்தியாவும் 1998ஆம் ஆண்டு முதல் அணுச்சோதனையை நடத்தின. வட கொரியா 2004 ஆம் ஆண்டில் தானும் அணுவாயுதங்களை வைத்திருக்கிறது எனக்காட்டிக் கொண்டது. தேசிய, சர்வதேச பிரச்சினைகளுக்கு அணு வாயுதங்கள் முக்கிய காரணமாக விளங்கியதுடன் 1940ஆண்டு முதல் தொடங்கப்பட்ட நாள் தொடங்கி இது ஒரு பொதுக் கலாச்சாரமாக பிரதிபலித்தது. மேலும் மனிதனின் நடத்தை இயற்கையை அழிக்கும் சக்தியின் அடையாளமாக விளங்கியது.

அடிப்படையாக அணுவாயுதங்கள் தமது சக்தியை கருப்பிளவு மூலம் பெறுகின்றன. ஒரு சிதைவடையும் (fissile) பொருள் உடனடியாக அவத்தைத் திணிவிற்கு (Critical mass) சேர்க்கப்படும்போது தாக்கமானது விரைவாக அதிகரித்து பெருமளவு சக்தியை வெளிப்படுத்துகின்றது. அதாவது எப்படிச் சாத்தியமாகிறதென்றால் ஒரு சிறியளவு உபஅவத்தைத் திணிவை (subcritical mass) வெப்பமூட்டுவதனால் ஒரு பெரிய அழிவு நிலைக்கு இட்டுச் செல்கின்றது. எல்லா அணுவாயுதங்களிலும் காணப்படும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் மிகக் குறைவான எரிபொருள் தான் அந்த ஆயுதம் அழிக்கப்படுமுன் பாவிக்கப்படுகிறது.

முன்னேற்றமான அணுவாயுதங்கள் கூடிய சக்தியைப் பெறுவதற்கு கருச்சேர்க்கை முறையைப் பாவிக்கின்றன. அவ்வாறான அணுவாயுதத்தில் X-ray கதிர்வீச்சைப் பயன்படுத்தி அணுப்பிளவை உண்டாக்கி அதன் மூலம் வெப்பத்தையும் கூட்டுப் பொருட்களாகிய திருத்தியம், துத்தேரியம் அல்லது லிதியத்தை பயன்படுத்தி அமுக்க உதவுகின்றன. ஐதரசன் குண்டுகள் என்றழைக்கப்படும் இவை கருப்பிளவு (fission) குண்டுகளிலும் பார்க்க பல மடங்கு சக்தி வாய்ந்தவை. இந்த மெகா தொன் பரம்பலுடைய வெப்ப அணுவாயுதங்கள் "Teller -Ulam design" முறையிலானவ்வை.

விசேஷ தேவைகளுக்கு பாவிப்பதற்கு பலவித அணுவாயுதங்கள் காணப்படுகின்றன. அணு ஆயுத வெடிப்பின் பின் தொடர்வது நியூத்திரன் கதிர்வீச்சு. அணுவாயுதத்தைச் சுற்றி தங்கம், கோபோல்ட் போன்ற உலோகங்கள் காணப்படுவதால் பெரிய அளவில் கதிர்வீச்சால் பாதிப்பு ஏற்படுகின்றன. நியூத்திரன் குண்டு (Neutron bomb) என்றழைக்கப்படும் இன்னொரு வகையான குண்டு கூடிய நியூத்திரன்களை வெளிப்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எதிர்ப்பு அணு ஆயுதங்கள் தொழில்நுட்ப ரீதியாக அணு ஆயுதங்கள் போலல்லாமல் (சக்தியைப் பெற கருப்பிளவு அல்லது கருச்சேர்க்கையினைப் பாவிப்பதில்லை) அணு வெடிப்புகளுக்கு எதிரான நிலையில் அமுத்தத்தை திணிவு ரீதியில் கொண்டிருக்கும். இவை அணுவாயுதங்களிலும் பார்க்க எடை கூடியன.

அணுவாயுதங்களிலிருந்து சக்தியை பின்வரும் முறைகளில் வெளியேற்றுகின்றது.

1. வெடிப்பின் மூலம் - 40-60% மொத்த சக்தி
2. வெப்ப கதிர்வீச்சு மூலம் - 30-50% மொத்த சக்தி
3. அயன் தன்மையுள்ள கதிர்வீச்சு மூலம் - 5% மொத்த சக்தி
4. நிலையாய் காணப்படும் கதிர்வீச்சு மூலம்(fallout) - 5-10% மொத்த சக்தி.

வெளியாகும் சக்தி அணுவாயுதம் வடிவமைக்கப்பட்ட முறையிலும் பாவிக்கப்படும் சூழலிலும் தங்கியிருக்கும். மேற்கூறிய சக்திகளில் நான்காம் பிரிவு சக்தி மூலம் வெளியாகும் கதிர்வீச்சு தாமதமாகத்தான் வெளியாகும். மற்ற மூன்று வகைகளிலும் உடனே சக்தி வெளியாகும். அணு ஆயுதங்கள் மூலம் வெளிப்படும் சக்தி பொதுவாக கிலோ தொன்கள் மெகா தொன்களில் கணிக்கப்படுகிறது.

முதல் 3 முறையிலான சக்தி வெளியேற்றம் பாவிக்கும் அணு ஆயுதத்தை பொறுத்தது. வெப்ப கதிர்வீச்சு தூரத்துடன் குறையும். பெரிய அணு ஆயுதமெனில் தாக்கம் குறைவதற்கு கூடிய நேரம் எடுக்கும். அயன் தன்மையினாலான கதிர்வீச்சு வளியினால் உறிஞ்சப்படும். எனவே இதன்போது சிறிய குண்டும் பாரிய விளைவை ஏற்படுத்தும். முதலாவது வகையான குண்டு வெடிப்பால் ஏற்படும் கதிர்வீச்சு அழிவு வெப்ப கதிர்வீச்சிலும் பார்க்க வேகமாகவும் அயன் தன்மையினாலான கதிர்வீச்சிலும் தாமதமாகவும் நிகழும்.

### அணுவாயுதங்கள் ஏவும் முறைகள்

1. ஈர்ப்புக்குண்டுகள் (Gravity bombs)

இவை விமானங்கள் மூலம் போடப்படுகின்றன. போடப்படுகின்ற குண்டுகள் பிரயாணம் செய்யும் போது அதிர்வுகளையும் காற்று வெப்பத்தையும் அமுக்கத்தையும் தாங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. Ballistic missile warheads

இவை ballistic trajectory என்ற முறை மூலம் வாகனத்திற்கு அனுப்பப்படுகின்றது.

3. Cruise missile warheads

இவை ஜெட் இயந்திரம் அல்லது றொக்கட் மூலம் சுடப்படுகின்றன. இவை குறைந்த உயரத்தில் தன்னியக்க வழிகாட்டி மூலம் பிரயாணம் செய்கின்றது. இவை கண்டறிவதிலும் வழிமறிப்பதிலும் இருந்து தப்புவதற்கு அணுமூடியை பயன்படுத்துகின்றது. இவை Ballistic missile இலும் பார்க்க சிறியவை. ஆனால் சக்தி வாய்ந்தவை.

வேறுவகையான போர் ஆயுதங்களாவன: பீரங்கிக்குண்டுகள், கண்ணிவெடிகள், ஆழமான இடங்களில் பாவிக்கும் அணுகுண்டுகள், torpedoes அணுகுழலும் (atomic motor) பரீட்சிக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா வான் பாதுகாப்பிற்கு சிறிய அணுவாயுதங்களைப் பாவித்தது. 1960 களின் பிற்பகுதியில் வான் பாதுகாப்பு அணுவாயுதங்களும் 1990 ஆம் ஆண்டுகளில் ஆழமான இடங்களில் பாவிக்கும் அணுகுண்டுகளும் சேவையிலிருந்து விலகின. ஆயினும் ரஷ்யா Ballistic missile எதிர்ப்பு அணுவாயுதத்தைக் கொண்டுள்ளது. (முற்றும்)

மூடின கைகளுடன் மனிதன் உலகிற்கு வருகிறான். திறந்த கைகளுடன் அவன் அதை விட்டுப் போகிறான்.

~ இந்தியா

வலம்புரி

## பயண மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை தேவை

திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கும். அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்கும் என்ற பாடல் வரிகள் எமக்கு மிகவும் பொருத்துடையவை.

யுத்தத்தை சாதகமாகக் கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கும் கூட்டம் ஒன்று வேரும் விழுதும் விட்டு இருக்கின்றது.

ஏ-9 பாதை மூடப்பட்டபோது பதுக்கல் வியாபாரம் கொள்ளை இலாபத்திற்கு துணை புரிந்தது. யாழ்ப்பாணத்துக்கும் வெளி மாவட்டங்களுக்குமான பயணப் போக்குவரத்து பணத்தை வாரிச்சுருட்ட உதவியது.

இப்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டாலும் அதற்குள்ளும் இருக்கக் கூடிய நடைமுறைச் சிக்கல்களை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பொதுமக்களின் பணத்தை சுருட்டும் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆம், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 பாதையூடாக வருவதில் சில நடைமுறைகள் தடையாக இருக்கின்றது.

அதாவது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் கொழும்புக்கு சென்று குடி இருந்தமையால் அவர்கள் திரும்பவும் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு தடை உள்ளது. இவர் கள் யாழ்ப்பாணம் வருவதாயின் விமானம் மூலமே வரவேண்டி உள்ளது.

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டு விட்டதால் விமானப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்கும் இடையில் விமான சேவை நடத்துபவர்கள் கொழும்பு-யாழ்ப்பாணத்துக்கான ஒருவழிக் கட்டணமாக பதினையாயிரம் ரூபாயை அறவிடுகின்றனர்.

ஒருவழிக் கட்டணம் பத்தாயிரத்து எழுநூற்றைம்பது ரூபாய் என விளம்பரப் பலகையில் எழுதி பார்வைக்கு வைத்து விட்டு இப்போது விசேட விமானம் எனக் கூறி பதினையாயிரம் ரூபாயை ஒருவழிக் கட்டணமாக அறவிடுவது எப்படி நியாயமாகும்?

ஏ-9 பாதை பூட்டப்பட்டிருந்த போது பயணிகளை ஏற்றுவதைவிட யாழ்ப்பாணத்துக்குப் பொருட்களை ஏற்றி அனுப்புவது உச்ச இலாபம் தரும் என்ற கணிப்பில் பயணிகளை நாயிலும் கேவலமாக நடத்தியவர்கள், பொது சனத்தை இடிபட வைத்தவர்கள்-உறவினர்களின் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்காதவர்கள்- இதற்கு மேலாக பின்கதவால் பயணச் சீட்டுக்களை கொடுத்து பணியாளர்களும் தங்கள் பொக்கெட்டுக்களை நிரப்பிக் கொண்ட நிலையில் இப்போது விசேட விமானம் விடுகிறார்களாம். அதற்கு வழமையான கட்டணத்தைவிட மேலதிகமாக நாலாயிரம் ரூபாய்.

இதைச் சொல்வதற்கு சாந்தமே உருவான சாமி போல் முதியவர் ஒருவர், அடடா இந்த உலகம் எத்துணை ஆபத்தானது என்பதை எண்ணும் போது உலகின் ஆயுட்காலம் மிகக் குறுகியது என எண்ணத் தோன்றுகிறது.

இத்தகைய மோசடிகளை உடைத்தெறிவதற்கு ஏ-9 பாதையை முழுமையாகத் திறந்துவிட வேண்டும். தனி யார் துறையினரும் ஏ-9 பாதையூடாக பயண சேவையை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதுடன் கொழும்பு, வவுனியா, திருகோணமலை உள்ளிட்ட இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும்; யாழ்ப்பாணத்திலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் ஏ-9 ஊடாக போக்குவரத்தை நடத்துவதன் மூலமாகவே மோசடிகளை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும்.

# முகாம்களில் உள்ள ஏனைய மக்களும் விடுவிக்கப்பட்டாலே மகிழ்ச்சியடைய முடியும்

## விடுவிக்கப்பட்ட இந்துமதகுரு தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த தங்களுக்கு இந்து மத குருமார்களுக்குரிய வசதிகள் செய்து தரப்பட்டிருந்ததாக முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி தர்மபுரம் விநாயகர் ஆலய பூசகரான மயில்வாகனம் மகேந்திர குருக்கள் தெரிவித்துள்ளார்.

தற்போது மட்டக்களப்பிலுள்ள உறவினர் வீட்டில் தனது குடும்பத்துடன் தங்கியுள்ள அவர் தான் தங்கியிருந்த முகாமில் விநாயகர் ஆலயமொன்று அமைக்கப்பட்டு வழிபாட்டிற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தமையினால் தமது நித்திய கர்மங்களை செய்வதற்கு அது உதவியாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

முகாமிலிருந்து தாங்கள் விடுவிக்கப்பட்டமை மகிழ்சி என்று கூறுவதற்கு இல்லை என்றும் அங்கு தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ள ஏனைய மக்களும் விடுவிக்கப்படும் போது தான் தங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வன்னி பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள் பூசைகள் இன்றி கைவிடப்பட்ட நிலையில் இருப்பது குறித்து கவலையடைந்துள்ளதாகக் கூறும் அவர் அந்த பிரதேசத்தில் மீள் குடியேற்றம் இடம்பெறும் வரை மட்டக்களப்பில் தங்கியிருந்து ஆலயமொன்றில் பூசகராக பணியாற்ற பலருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# இறுதித் தீர்வுத் திட்டத்திற்கு ஜனாதிபதி இதுவரையில் பதிலளிக்கவில்லை

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிப் பேரவையினால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் ஜனாதிபதி இதுவரையில் பதிலளிக்கவில்லை என பேரவையின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பேரவையின் இறுதிப் பரிந்துரைகளின் சாராம்ச அறிக்கை ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டு ஒரு மாத காலம் முடிபடைந்துள்ள போதிலும் எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கப் பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடம் விரைவில் தாம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் சர்வகட்சிப் பேரவையின் நடவடிக்கைகள் மீள ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

### ஜே.வி.பி.நாளேட்டின்

## மூன்று ஊடகவியலாளர்கள் காவல்துறையினரால் கைது

(கொழும்பு)

இலங்கையின் தலைநகர் கொழும்பில் இருந்து வெளியாகும் ஜே.வி.பி. நாளேடான லங்காவில் பணிபுரியும் மூன்று ஊடகவிய லாளர்கள் தென்பகுதியில் உள்ள தெல்தெனியாவில் கடந்த புதன்கிழமை இலங்கை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தென் மாகாண சபை தேர்தல் தொடர்பான செய்தி களை சேகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக லங்கா நாளேட்டின் ஆசிரியர் தெரி வித்தார்.

இருந்த போதிலும் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றுக்குள் முன் அனு மதி பெறாமல் பிரவேசித்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர். (ஓ-6)

### அடுத்தவருடம் ஜனவரியில்

## மின்சாரசபை ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் பெற்றுக் கொடுப்பதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபைத்தலைவர் எ.எஸ்.கே. எதிரி சிங்க தெரிவித்துள்ளார்.

சம்பள மற்றும் சேவைகள் ஆணைக்குழு விடம் இது தொடர்பாக கலந்துரையாடி வரு வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மின்சாரசபையில் 14 ஆயிரத்து 500 ஊழியர்கள் தொழில் புரிகின்றனர் எனவும் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை அடுத்து மாதமொன்றிற்கு 7 மில்லியன் நிதியை மேலதிகமாக ஒதுக்க வேண்டியுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-14)

## வெள்ளி நற்சிந்தனை 87

# பக்தியின் மொழி தமிழ்

இறைவனைக் கண்ணால் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு. ஆனால் இவ்வெண்ணம் நிறைவேறுமா என்ற ஏக்கமே பலரிடமும் குடிகொண்டுள்ளது. வயதில் முதியவரான அப்பர் இறைவன் தோற்றத்தைக்கண்டு மகிழவேண்டும் என்ற பெருவிருப்போடு சென்று கொண்டிருக்கிறார். அவர் திருவையாறு திருத்தலத்திற்கு அருகே வருகின்ற போது கண்ணாரக் கண்ட காட்சிகளைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

பலஅடியார்கள் திருவையாறு தலத்திற்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பக்திக் கோலம் அப்பரைப் பரவசப்படுத்துகிறது. சிவனின் திருக்கோல அழகைப் பற்றி அவர்கள் பாடிக்கொண்டு செல்கிறார்கள். இறைவன் திருத்தலையிலே சூடியிருக்கின்ற துண்டப் பிறையும் கண்ணியும் காட்டும்கோல அழகுதான் முதலில் மனக்கண்ணிற் படுகிறது. அந்த அழகுக் கோலமுடையானை மலையத்துவசன் மகளான பார்வதிதேவியோடும் பரவிப் பாடும் அடியார் கூட்டத்தைக்கண்ட அப்பர் தன்னை மறந்து அவர்கள் போடும் திசையையே பார்க்கிறார்.

கைகளிலே நேரத்திற்கேற்ப மலர்ந்த மலர்களையும் நீரையும் சுமந்தபடி இறைவனை ஏந்தித்தொழுதவண்ணம் சென்று கொண்டிருக்கிறார்கள். வாழிபாட்டிற்கு இன்றியமையாத பூக்களையும் நீரையும் அடியவர்கள் எடுத்துச் செல்லும் வழிபாட்டு மரபை அப்பர் மனத்துள் கொள்கிறார். அந்த அடியவர்களோடு தானும் செல்ல விரும்புகிறார். அதனால் போகின்ற அடியவர்களுக்குப் பின்னே புறப்படுகிறார். *புகுவாரவர் பின் புகுவேன்* என்ற உறுதியோடு எந்தவிதமான காலடி ஓசையும் எழாவண்ணம் மெல்ல நடந்து செல்கிறார். அவ்வாறு நடந்து சென்று ஐயாறு திருத்தலத்தை அடைகின்ற போது அவர்கண்ட காட்சி அவரை மெய் சிலிக்கச் செய்கிறது. அங்கு அவரை நோக்கி ஆண்யானையொன்று தனது அன்புக்குரிய பெண்யானையோடு இணைந்து வருகின்றது. அவ்வாறு அவை வருகின்ற போது அப்பருக்கு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனுடைய திருப்பாதம் கண்ணில் தெரிகிறது. அதைக்கண்டவுடன் *கண்டறியாதன கண்டேன்*. என்று வியந்து நிற்கிறார். ஆண்யானையும் பெண்யானையும் இணைந்து வரும்காட்சி அப்பர் மனதிலே உள்ள பக்தி நிலையால் இறைவனும் இறைவியும் போலத் தெரிகிறது. காட்டு விலங்கு என்ற எண்ணம் தோன்றவில்லை. யானையின் பாதம் இறைவன் திருப்பாதமாகவே கண்ணில் தெரிய அது அவர் அதுவரை கண்டறியாத காட்சியாக இருக்கிறது .

**மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின்புகுவேன்**
**யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது**
**காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்**

# செல்வச்சந்நிதி தீர்த்தத் திருவிழா சிறப்பு மலர் - 04.09.2009

## முருகனவன் தீர்த்தம் காண்கின்றான்

சின்னக் கதிர்காமமாய்
சிறப்பிடம் பெறும்
செல்வச் சந்நிதியான்
தீர்த்தம் காண்கிறான்

கோமணக் கோலத்தோடு
ஆண்டியாய் நின்றவனுக்கு
அரோகரா சொல்லும்
அற்புதக் காட்சியது


வேல்கொண்டு வினை தீர்க்க
தோன்றிய வேலவனே !
வள்ளியவளை மணம் முடிக்க
வேங்கைமரமாக மாறியவா
சேனைபுடை சூழ
வெற்றி கொண்ட நாயகா !
தோத்திரம் பாடியே
வழிபாடு செய்கிறோம்

**வே. அகிலேஸ்வரா, குருநகர் நலன்புரி நிலையம்**

## கொஞ்சு தமிழ் கந்தா

தொல்லை வினைதீர்க்கும்
செந்தமிழ் முருகா !
அல்லல் படும் எம் வினைதீர்த்து,
அருள்புரிவாய் குமரா!
கொஞ்சு தமிழ் பேசிடும் - எம்
சந்நிதியின் செல்வா !
எமைக் காத்தருள்வாய் நீ கந்தா !

**சித்தூர் க.விஜயகாந்தன்**



## "தொல்லைகள் நீங்கிட தொண்டைமானாற்றில் தீர்த்தமாடி வருக"

தொல்லைகள் நீங்கிட தொண்டைமானாற்றில் தீர்த்மாடி வருக
தொண்டர்களெல்லாம் தோத்திரம் ஓதிட தீர்த்தமடி வருக
பூவர மரத்தடியில் பூபாளம் ஒலித்திட தீர்த்தமாடி வருக
புவனமெல்லாம் காத்திட புதுயுகம் மலர்ந்திட தீர்த்தமாடி வருக
பூவுறையாளும் நாராயணனும் போற்றி மகிழ்ந்திட தீர்த்தமாடி வருக

**தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்**

## சந்நிதி யானைமனங் குளிரச்சென்று காண்பேனே!

கந்தனை கலியுகவர தனைகாலனை கனன்று
காலாலுதைத் தான்தன் குமாரனை சரவணனை
இந்திரன் மருகனை இமயவன் சிறுவனை
ஈராறுமு கத்தானை ஆற்றங்கரையானை
சுந்தரனை சூரன்கொடு மையொழித்தா னைமன்னும்
தொண்டைமானா றுவந்தானை அன்னதான பெருமானை
சந்நிதியா னைவிருத்தரை வியாதிஸ்தரை தரித்திரை
தாய்போல் அணைப் பானைமனங் குளிரச்சென்று
காண்பேனே !

**பா.பாலச்சந்திரன்**
**சுன்னாகம்**


அன்னதானக் கந்தனே அடியவர்களுக்கு அருள்தா

கொங்கிறீற் தூண்கள், கொங்கிறீற் கற்கள், பல்வேறு அழகிய அச்சுக் கற்கள், மணல் வகைகள் ,பூச்சாடி வகைகள்
ஆகியவற்றை மிகவும் குறைந்த விலையில் பெற்றிட நாடவேண்டிய இடம்

சரவணன்

கட்டட விற்பனையாளர்கள்

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை
(ஆனைக்கோட்டை சந்தி)

தொ.பே. 077 3960345

(C/3244)





செல்வச்சந்நிதி முருகனின் தீர்த்தத் திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

DSI

மோட்டார் சைக்கிள் ரயர்




- இலங்கையில் அதிகூடிய தூரப் பாவனைக்குகந்த ரயர்
- அதிர்வுகள், சறுக்குதல் ஆகிய வற்றில் இருந்து பூரண பாதுகாப்பு
- அதி குறைந்தளவு எண்ணெய் பாவனை
- உலக நாடுகளில் உள்ள 10 மில்லியன் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது.

Available to buy at Colombo Price.

Distributer for Jaffna :
POPULAR MOTOR STORES,
270,STANLEY ROAD,JAFFNA. T.P:021 2223535 021-2222403




Samson Rubber Industries (Pvt) Ltd,
Jinasena Mawatha, Mahara, Kadawatha. Tel : 011-2926065, 011-4816442
Fax : 011-2925064, 011-4816440 E-mail : dsityre@dsityre.lk

(C/3241)



Multilac

MACKSONS PAINTS WORLDWIDE

'அகிலத்தின் நாயகனே உன்னருள் நாடிநிற்கின்றோம்'

வர்ண
உலகில்
புரட்சி

மிக உயர்ந்த தரம்
ஆகக்குறைந்த விலை




உயர்ந்த தரச் சான்றிதழ்களுக்கு இப்போது அதிகம் செலவு செய்யாதீர்கள்

கந்தவேலன் வர்ணவங்கி
KANTHAVELAN COLOUR BANK

110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/3242) தொ.பே. 021 222 2822



செல்வச் சந்நிதியானின் தீர்த்தோற்சவத்தை
சிறப்புற வாழ்த்துகின்றோம்

யாழ் நகரில் முன்னணிப் பயிற்சியாளர்கள்

கிருபா லேணர்ஸ்

சாரதிப்பயிற்சி பாடசாலை





புதியசாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் எழுத்துப்பரீட்சையிலும் சித்தியடைய விசேட வகுப்புக்களும் நடாத்தப்படும்.

வீதி ஒழுங்கு வகுப்புக்களும் மற்றும் செயன் முறை (றயல்) பரீட்சையில் சித்தியடைய வான், மோட்டார் சைக்கிள்,ஓட்டோ ஆகிய வாகனங்களில் விசேட வாகனப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

தலைமைக் காரியாலயம்,
225, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2224353
0777 225292

கிளை நிறுவனம்
மகாத்மா வீதி,
நெல்லியடி,
060 2006550

(C/3240)

# ஐ.சி.சி. விருதுக்கு தோனி, டில்சானின் பெயர்கள் மூன்று பிரிவுகளில் பரிந்துரை



(மும்பை)

ஐ.சி.சி. விருதுக்கு இந்திய அணித் தலைவர் தோனியின் பெயர் 3 பிரிவுகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. யுவராஜ், காம்பீர், ஹர்பஜன், சேவக் உள்ளிட்ட இந்திய வீரர்களும் விருதுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

கிரிக்கெட் ஒஸ்கார் என அழைக்கப்படும் ஐ.சி.சி. விருதுகள் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் நடைபெறவுள்ளது. விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகளின் பட்டியல் நேற்று முன்தினம் மும்பையில் வெளியிடப்பட்டது.

இந்திய வீரர் சேவக் மற்றும் முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி ஆகியோர் பட்டியலை வெளியிட்டனர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 13 திகதி முதல் இந்த ஆண்டு ஆகஸ்ட் 24 திகதி வரை வீரர்களின் செயல்பாடுகள், கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். இதனடிப்படையில் வீரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

8 தனிநபர் விருதுகள் உட்பட ஆண்டின் சிறந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் அணிகளுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன. விருது தேர்வுக்குழு தலைவராக மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வீரர் கிளைவ் லொய்ட் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவில் இந்தியாவின் அனில் கும்ளே, பாகிஸ்தானின் முடாசர் நாசர், இங்கிலாந்தின் பாப் ரெய்லர், நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளமிங் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

### இந்தியா ஆதிக்கம்

கடந்த ஆண்டு ஐ.சி.சி. வழங்கிய சிறந்த டெஸ்ட் வீரர் விருதை வென்று அசத்தினார் இந்திய அணித்தலைவர் தோனி. இம் முறை ஆண்டின் சிறந்த வீரர், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் வீரர் உட்பட 3 பிரிவுகளில் தோனியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆண்டின் சிறந்த வீரர், டெஸ்ட் வீரர் ஆகிய இரண்டு பிரிவுகளில் இந்தியாவின் காம்பீர், ஹர்பஜன் சிங் ஆகியோரது பெயர்கள் பரிந்துரை பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

ஆண்டின் சிறந்த ஒரு நாள் வீரருக்கான பட்டியலில் சேவக், யுவராஜ் பெயர்கள் உள்ளன. இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ராகுல் ராவிட் பெயர்கள் எந்தப்பிரிவுக்கும் பரிந்துரை செய்யப்பட வில்லை. லக்ஸ்மன் பெயர் மட்டும் சிறந்த டெஸ்ட் வீரர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

வளர்ந்து வரும் வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலில் இந்தியா தரப்பில் அமித் மிஸ்ரா இடம் பெற்றுள்ளார். சிறந்த இருபது-20 வீரர் விருதுக்கு இந்தியாவின் சகீர் கான் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

### இரண்டு வீராங்கனைகள்

ஆண்டில் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை விருதுக்கு இந்தியா சார்பில் மிதாலிராஜ், பிரியங்கா ராய் ஆகியோரது பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அதிகபட்சமாக தோனி, இலங்கையின் டில்சான் பெயர்கள் 3 விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விருதுக்கு (2009) பரிந்துரைக்கப்பட்டவர்கள்;

**ஆண்டின் சிறந்த வீரர் விருது:** தோனி (இந்தியா), காம்பிர் ( இந்தியா), ஹர்பஜன் (இந்தியா), சந்தர்போல் (மேற்கிந்திய தீவுகள்), டல்சான் (இலங்கை), சகிப் (பங்களாதேஷ்), ஜோன்சன் (அவுஸ்திரேலியா), ஒனியன்ஸ் (இங்கிலாந்து), சமரவீர (இலங்கை), சங்கக்காரா (இலங்கை), சிமித் (தென்னாபிரிக்கா), ஸ்ரொரஸ் (இங்கிலாந்து), விக்டோரி (நியூசிலாந்து) மற்றும் டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா).

**சிறந்த டெஸ்ட் வீரர் விருது:** தோனி (இந்தியா), காம்பீர் (இந்தியா), லக்ஸ்மன் (இந்தியா), ஹர்பஜன் (இந்தியா), பிரோட் (இங்கிலாந்து), மைக்கேல் கிளார்க் (அவுஸ்திரேலியா), டில்சான் (இலங்கை), சாகிப் (பங்களாதேஷ்), ஜோன்சன் (அவுஸ்திரேலியா), ரைடர் (நியூசிலாந்து), சமரவீர (இலங்கை), சர்வான் (மேற்கிந்திய தீவுகள்), சிடில் (அவுஸ்திரேலியா), சிமித் (தென்னாபிரிக்கா), ஸ்ரைன் (தென்னாபிரிக்கா), ஸ்ரொரஸ் (இங்கிலாந்து), சுவான் (இங்கிலாந்து), விக்டோரி (நியூசிலாந்து) மற்றும் டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)



**சிறந்த ஒரு நாள் போட்டி வீரர் விருது:** தோனி (இந்தியா), யுவராஜ் (இந்தியா), சேவக் (இந்தியா), சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்), கெயில் (மேற்கிந்தியத் தீவுகள்), பிளின்டொப் (இங்கிலாந்து), மைக்கல் ஹசி (அவுஸ்திரேலியா), குப்தில் (நியூசிலாந்து), உமர் குல் (பாகிஸ்தான்), குலசேகர (இலங்கை), மெண்டிஸ் (இலங்கை), முரளிதரன் (இலங்கை) மற்றும் துஷார (இலங்கை).

**சிறந்த இருபது-20 வீரர் விருது:** சகீர் கான் (இந்தியா), அப்ரிடி (பாகிஸ்தான்), அஜ்மல் (பாகிஸ்தான்), பிராவோ (மேற்கிந்திய தீவுகள்), கசாக் (அயர்லாந்து), டில்சான் (இலங்கை), கிறிஸ் கெயில் (மேற்கிந்திய தீவுகள்), உமர் குல் (பாகிஸ்தான்), டேவிட் ஹசி (அவுஸ்திரேலியா), ஜெயசூர்யா (இலங்கை), மெண்டிஸ் (இலங்கை), பார்னெல் (தென்னாபிரிக்கா), அப்துர் ரசாக் (பங்களாதேஷ்) மற்றும் டேவிட் வோர்னர் (அவுஸ்திரேலியா).

## இந்திய அணிக்கு நம்பர்-1 வாய்ப்பு

(டுபாய்)

இலங்கையில் நடக்கும் முத்தரப்பு தொடரின் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில் ஒருநாள் போட்டிக்கான தரைவரிசைப் பட்டியலில் இந்திய அணி முதன் முறையாக நம்பர்-1 இடம் பெறலாம்.

சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி.) சமீபத்தில் வெளியிட்ட ஒருநாள் போட்டி அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க அணி 127 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதனை தொடர்ந்து இந்தியா-126, அவுஸ்திரேலியா-119 ,இங்கிலாந்து-111, புள்ளிகளுடன் உள்ளன.

இப்பட்டியலில் இந்திய அணி முதல் இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு பயணம் செய்ய உள்ள இந்திய அணி எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இதில் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான லீக் போட்டி மற்றும் இறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெறும் பட்சத்தில் நம்பர்-1 இடத்துக்கு முதன் முறையாக முன்னேறலாம்.

## 2011 உலகக் கோப்பை ஆரம்ப விழா பங்களாதேஷில்

(மும்பை)

2011 உலகக் கோப்பைக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப விழா பெப்ரவரி 17 ஆம் திகதி பங்களாதேஷில் நடக்கும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் (50 ஓவர்) எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷில் நடக்க உள்ளது.

இத் தொடருக்கான போட்டி அட்டவணை எதிர்வரும் நவ.9 ஆம் திகதி அறிவிக்கப்படும் என, உலகக் கோப்பை ஒருங்கிணைப்புக் குழு நேற்று முன்தினம் அறிவித்தது.

போட்டிகள் நடக்க உள்ள இடங்களின் பாதுகாப்புக் குறித்து வரும் ஒக்டோபரில் ஆய்வு செய்யப்படவுள்ளது. இருப்பினும் உலக கோப்பை போட்டிகளின் ஆரம்ப விழா பங்களாதேஷில் நடக்கவுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி ஆரம்ப விழாவும் ,இதனை அடுத்து பெப்ரவரி 19 இல் முதல் போட்டியும் பங்களாதேஷில் நடக்கவுள்ளன.

## அமெரிக்க ஓபன் டென்னிஸில் பெடரர், வீனஸ், செரீனா முன்னேற்றம்

## சானியா மிர்சா வெளியேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் உலகின் முதல் நிலை வீரரும் நடப்புச் சம்பியனுமான ரோஜர் பெடரர்(சுவிட்சர்லாந்து) 3 வது சுற்றுக்கு தகுதி பெற்றார். அவர் 6:3,7:5, 7:5 என்ற நேர் செட் கணக்கில் ஜெர்மனியை சேர்ந்த சைமனை தோற்கடித்தார்.

கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மற்ற ஆட்டங்களில் மாட்டின் டெல போட்ரேர் (ஆர்ஜென்டினா), லைடன் ஹெவிட்(அவுஸ்திரேலியா), டேவிட் பெரர்(ஸ்பெயின்) ஆகியோர் வென்றனர். 3 ஆம் நிலை வீரரான ரபெல் நடால் 2 -வது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ்(அமெரிக்கா) 6:1, 6:1 என்ற நேர் செட் கணக்கில் மெலின்டாவை(அங்கேரி) தோற்கடித்தார். மூன்றாம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்(அமெரிக்கா) 6:4,6:2 என்ற நேர் செட் கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த பெதானியை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் முன்னாள் நம்பர்-1 வீராங்கனையான கிம்கிளிஸ்டர்ஸ்(பெல்ஜியம்), ஜ°வானேரவா(ரஷியா), டேனிலா(சுலோவாக்கியா) ஆகியோர் வென்றனர்.

இந்தியாவின் முன்னணி வீராங்கனையான சானியா மிர்சா 2 ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். அவர் 0:6,0:6 என்ற கணக்கில் உலகின் 10 ஆம் நிலை வீராங்கனையான பிளவியாவிடம் தோற்றார்.

இதேபோல் 17 ஆம் நிலை வீராங்கனையான அமெய்லி மவ்ரஸ்மோவும் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.

சேவை

* ரேடியோ
* றெலிவிசன்
* வீடியோ டெக்
* அம்பிளி
* CD Player
* DVD Player
* Car Cassette Radio
* சலவை இயந்திரங்கள்

திருத்திக் கொடுக்கப்படும்.
குறிப்பு:-சகல எலக்ரோனிக் உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து பெற்றுக்கொடுக்கப்படும்.
விபரங்களிற்கு:- NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகாமை),
யாழ்ப்பாணம்.
T.P.:- 0718561654, 0779254078 (C-3215)

தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ ரேடியோ, றெலிவிசன், வீடியோ டெக் ரிப்பியறிங்
★ ரேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ றெலிவிசன் ★ CD Player ★ Amplifier — காலம்:-10மாதம்
☆ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock — காலம்:-3மாதம்
☆ ஏயார் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். — காலம்:-6மாதம்
☆ எலக்ரிக்கல் வயறிங் , ரீவைண்டிங் — காலம்:-6மாதம்
☆ Diploma in computer Hard ware Engineering — காலம்:-3மாதம்
குறிப்பு: சகல பயிற்சிகளுக்கும் 6 மாதம் முதல் 10 மாதம் வரை முழு நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
விபரங்களிற்கு, பயிற்சிகள் ஆரம்பம் :06/09/2009
JAFFNA TECHNICAL INSTITUTE
No.45, மணிக்கூட்டு வீதி(பெருமாள் கோவில் முன் வீதி),
யாழ்ப்பாணம். T.P:- 021 222 6434, 0718561654 (C-3214)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
Learn French the French Way
French Classes
இலங்கையிலுள்ள French Embassy மூலமும், France இல் உள்ள Alliance Francaise de Paris இன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
மாணவர்கள், உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் கற்கலாம்.
மற்றுமொரு புதிய பிரிவு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
பதிவு, கட்டண விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(c-3228)

## ஏ-9 பாதையூடாக பயணம்...

சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரத்ன தெரிவித்தார்.

ஒருதடவை யாழ்ப்பாணம் போய் வருவதற்கு இந்த பார ஊர்தி உரிமையாளர்கள் ஒரு இலட்சம் ரூபாய் கேட்கின்றனர் என்றும் அதன் காரணத்தினாலேயே வர்த்தகர்கள் எவரும் இவர்களது பார ஊர்திகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதில்லை என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்துக் கட்டணம் எடுத்துச் செல்லப்படும் மற்றும் அங்கிருந்து கொண்டுவரப்படும் பொருட்களின் தொன் கணக்கை பொறுத்தே தீர்மானிக்கப்படும். அதுவும் 60 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக ஒருபோதும் செல்லாது என்றார் திவாரத்ன.

பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தனியாருக்கும் அனுமதிகளை வழங்குவது குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையகம் கவனம் செலுத்திவருகிறது. அனுமதிக்கட்டணமாக எவ்வளவு பெறுவது என்பது குறித்து தற்போது ஆலோ சிக்கப்படுகிறது. (ச-5)

## நலன்புரி முகா...

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

.வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சுமார் மூன்று இலட்சம் அகதி மக்களின் நிலைமை கவலையளிக்கின்றது. அவர்களுக்கான வசதிகளில் முன்னேற்றம் காணப்பட வில்லை. முகாம்களுக்கு வெளியில் செல்வதற்கு அம்மக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கென ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. இது குறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது குறித்து நோர்வே அரசுடன் தான் பேசியுள்ளதாகவும் ஐ.நா. செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (ச-5)

## முன்னாள்...

அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். தற்சமயம் வெளிப்படையாக புலிகளை நாம் அழித்து விட்டோம். ஆனால் இந்த இளைஞர்கள் நீண்ட காலமாக புலிகளின் உயர் தலைவர்களால் அரச படையி னருக்கு எதிராக போராடுவதற்காக மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும். இது மிகப்பெரிய சவால் என்றார் தயா ரட்னாயக்க.

தற்போது வன்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் முன்னாள் போராளிகள் தொடர்பில் அவர்களது தனிப்பட்ட விபரங்கள், கல்வி அறிவு என்பவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும், அவர்கள் எவ்வளவு காலம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தார்கள் என்பதையும் பொறுத்து அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படும் கால அளவு தீர்மானிக் கப்படும் என்றும் மேஜர் ஜெனரல் தயா ரட்ன கூறினார். (ச-5)

## யாழ்.-வவுனியா சேவையில்...

மேலும் தெரிவித்ததாவது;

கடந்த யூலை மாத இறுதியில் ஏ-9 வீதியூடான பஸ் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுதான் அதிகளவாக 20 பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன.

இதில் தேசிய மட்டப்போட்டிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் மாணவர்களுக்காக 10 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. அத்துடன் சொகுச பஸ், அரை சொகுசு பஸ்கள் அடங்கலாக மேலும் 10 பஸ்கள் சேவையில் ஈடுபடும்.

### ஆசன முன்பதிவு நடைமுறைக்கு

அத்துடன் வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் 4 அரை சொகுசு பஸ்களும். தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 4 அரைச் சொகுசு பஸ்களுக்கான ஆசன முற்பதிவு எதிர்வரும் 7ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

இதன் மூலம் அரைச் சொகுசு பஸ்ஸில் எத்தனையாவது ஆசனம் என்பது முன்னதாகவே பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

### அரைச்சொகுசு பஸ்ஸுக்கு 300 ரூபாய் அறவீடு

அத்துடன் அரைச்சொகுசு பஸ்ஸில் நின்று கொண்டு பிரயாணம் செய்யத் தேவையில்லை. இச் சேவைக்கு யாழ்ப்பாணத்திலி ருந்து வவுனியா வரை 300 ரூபாய் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

ஆனால் சாதாரண பஸ்களில் யாழ்ப்பாணத் திலிருந்து வவுனியாவரை பயண கட்டணமாக 200 ரூபாய் அறவிடப்படும். தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளில் வவுனியாவிலிருந்து புகையிரதத்தில் செல்லாதவர்களின் நன்மை கருதி தினமும் ஒவ்வொரு பஸ் மதவாச்சி வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அடுத்து வரும் சில தினங்களில் பாடசாலை விடுமுறை நிறைவு பெறுவதால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் நன்மை கருதி சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று 16 பஸ்கள் மற்றும் 2 சொகுசு பஸ்களிலுமாக மொத்தம் 865 பயணிகள் வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்துள்ளனர். (ச-5)

## யாழ். மாநகர...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்ததையடுத்து, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளார் நாயகம் சுசில் பிரேம ஜயந்தவுக்கு எழுத்து மூலமாக தமது நியாயமான வேண்டுகோளை முன்வைத்திருந்தது.

நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர், அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் கல்வி அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது, யாழ் மாநகர சபை உதவி மேயர் பதவி ஒரு வருடத்துக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியினருக்கு வழங்குவதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், ஒரு வருடத்துக்கு பின்னர் அப்பதவி அகிலஇலங்கை முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்குவது என்ற உடன்படிக் கையும் கைச்சாத் திடப் பட்டுள்ளது. (ச-5)

## சனல்...

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது;

அந்த வீடியோவில் இருப்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் எமது அரசு மறுக்கிறது. இவ் வீடியோக்காட்சி முற்றிலும் புனையப்பட்ட ஓர் செய்தி. திட்டமிட்டு இலங்கை அரசுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தீய எண்ணத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த வீடியோ கடந்த ஜனவரி மாதம் அடையாளம் காணப்படாத ஒரு இடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த சமயத்தில் இலங்கையில் மோதல் நடைபெற்ற இடங்களில் சர்வதேச அமைப்புகளின் பிரசன்னம் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது.

அந்த கால கட்டத்தில் அப்பகுதியில் விடுதலைப்புலிகளும் ஒரு சண்டையிடும் படையாக தீவிரமாக செயற்பட்டு வந்தனர். இப்படியான ஒரு செயல் இடம் பெற்றிருக் குமாயின் எட்டு மாதங்களுக்கு சர்வதேச சமூகம் சும்மா இருந்திருக்காது என்றும் வெளியுறவு அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5;14)


## நியூ சிற்றி ரேடர்ஸ் (இடமாற்றம்)

கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த மேற்படி ஸ்தாபனம் 319 A, கே. கே. எஸ்.வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. சகலவிதமான சைக்கிள் உதிரிப்பாகங்களையும், மின்னிணைப்பு சாதனங்களான 104 டி,ஏத், வயர், மெயின்வயர் மற் றும் ஏனைய மின்சாரப் பொருட்களையும், மேசை-கூரை-ஸ்ராண்ட் மின் விசிறிகளையும் 500, 1000, 1500, 3000 watts ஸ்ரப்பிளைசர்களையும், சார்ச்சர், சார்ச்சர் ரோச், கிறைன்டர், ரைஸ் குக்கர், வாட்டர் கீற்றர், கேத்தல் கீற்றர், ரோஸ்ரர், ஒவன், காஸ் குக்கர், பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் அடுப்புகள், அயன், ஹொட்பிளேட், ரியூப்லைற் செற், 3U, 2U குமிழ் மின் குமிழ் மற்றும் ஏனைய இலத்திரனியல் பொருட்களையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்

T.P.:- 021 222 3226

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(மேற்படி ஸ்தாபனத்திற்கு யாழ்.நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை. மேற்படி ஸ்தாபனம் கே.கே.எஸ்.வீதியில் ஸ்ரான்லி றோட் சந்தியிலிருந்து உட்புறமாக ஐந்தாவது கடை.)

(C-3197)

## மீண்டும் மலிவான விலையில்...



- Intel 1.6 Ghz Processor
- Intel Chip D945GCLF Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 15" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

37000/- MW1



- Intel 2.8 Ghz Pentium Processor
- Intel Chip Asrock G31 M-S Motherboard
- 160GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 15" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

41000/- MW2



- Intel 2.2 Ghz Dual Core Processor
- Intel Chip Foxconn G31 Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

48500/- MW3



- Intel 2.5 Ghz Dual Core Processor
- Intel Chip Asrock G31 Motherboard
- 250GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

49500/- MW4



- Intel 2.6 Ghz Dual Core Processor
- Asus P5 KPL-AM Motherboard
- 320GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

50000/- MW5



- Intel 2.8 Ghz Core 2 Duo Processor
- Intel Chip Intel DG31 PR Motherboard
- 320GB SATA Hard Disk
- 1 GB DDR II Ram
- ATX Casing
- DVD Writer
- 19" LCD Monitor
- Optical Mouse
- Keyboard
- UPS 650W

56500/- MW6

| Printer | | Scanner | | SUBWOOFER | |
|---|---|---|---|---|---|
| HP 1560 | 4300/- | Mustek | 5500/- | 2.1 SSD | 2200/- |
| Canon IP1980 | 5000/- | HP 2410 | 7500/- | 5.1 Microlap | 5700/- |
| HP 1005 Laserjet | 13750/- | HP G3110 | 13900/- | 5.1 Creative | 6750/- |

**Accessories**
- Headphone - 400/-
- Modem 56K - 600/-
- Soundcard - 450/-
- Card Reader - 400/-
- Power Supply - 1250/-
- UPS Battery 12V - 1250/-

**UPS**
DCP 650 W - 3900/-
Techcom 650 W - 3900/-

* Warranty Value 1-3 years
* Stock Available

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.

141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

(C-3211)

## டக் முறையில் ரயர்கள் புதுப்பித்தல்

வான், லொறி, பஸ் ஆகியவற்றின் தேய்ந்த ரயர்கள் **டக் முறையில்** புதுப்பித்துக் கொடுக்கப்படும்.




600 X 14 தொடக்கம்
1000 X 20 வரையான
டயர் அளவுகள் புதுப்பிக்க ஏற்றுக்கொள்ளப்படும்.



நோர்தேண் இன்டஸ்றீஸ் (பி) லிமிட்டெட்,
69, பிறவுண் வீதி, கொக்குவில்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 07 1944



மறைவு 04 09 2008

**அமரர் வோல்ரர் பாலகிருஷ்ணன் ராஜதுரை**

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" (வெளி – 14:13)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

– குடும்பத்தினர்

(3363)


# இப்பொழுது PC SYSTEMS சுன்னாகத்தில் Internet Browsing

வெளிநாட்டு அழைப்புக்கள் நிமிடத்திற்கு 3/= மட்டுமே

Internet Browsing மணித்தியாலத்திற்கு 30/= மட்டுமே

ஆலடிச்சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.

இல.24, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம.

(C-3249)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.